சுதேசமித்திரன்

27—6—48

விலை 4 அணா



THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
:: நன்கு பாதுகாக்கிறது :

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

1-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:—1 முதல் 3. உமது எதிர்கால, கேள்விகட்கு ரூ. 2.
3-க்குமேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5.
ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 2.
குறிப்பு:—வெளிநாட்டிற்கு இரட்டிப்புக் கட்டணம்.

சில - நற்சாட்சிகள் :

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ்:— "தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது."

ராவ்பகதூர் C. V. கிருஷ்ணஸ்வாமி B. A., ரிடையர்டு Dy. S. P. அண்டு அட்வகேட், உறையூர் கூறுவது:—ஜோதிஷ உலகில் இவரது சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. இவர் கூறும் ஜாதக பலன் களைக் கேட்டவர், அவைகள் உண்மையாகவும், பூர்த்தியாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதை உணர்வதுடன் அவரை உண்மையில் இம்மை மறுமைக்கு வழித்தோழராகவும், ஆப்த நண்பராகவும் இருப்பதை அறிவார்.

Sri B. K. சதுர்வேதி - பார்-அட்-லா, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸுரத்கார்-பிகானிர் ஸ்டேட் :—தங்களுடைய ஜோதிஷ பலன்கள் மிகவும் உண்மையாகவும், அதி ஆச்சரியமாயும் விளங்கின. தாங்கள் பெரிய ஸ்டேட் ஜோதிஷராய்-ராஜ் ஜோதிஷராய் பிரகாசிக்கத் திறமை வாய்ந்தவர்".

Sri E. J. இராஜரத்னம், சிலோன்-சிவில் ஸர்விஸ், கவர்ன்மெண்ட் ஏஜண்டு, களுடாரா, கொழும்பு, சிலோன்:—"தங்களுடைய ஜோதிஷ கணிதஞானத்தையும், பலன் கூறும் முறையையும் கண்டு மிகவும் மெச்சுகிறேன். இவ்வளவு ஆச்சரியமாயும், உண்மையாகவும். எதிர்கால பலன்களை கூறுவீர்கள் என்று நான் எண்ணவே இல்லை.

T.V. ஜெயராம சாஸ்திரிகள், ஆயுர்வேத பண்டிட் & ஜோதிஷ வித்வான்.

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O.
(தென் இந்தியா)

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனுதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காயகறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:— (கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் சுரல், குலே, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கிழவீதி	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப் பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி **R. M.** நாராயணசாமி பிள்ளை,

தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

கலியாண வெகுமதிகளுக்கு

பல ஊர்

பட்டு & நூல்

ரவுகி ரகங்கள் சாசமாய்

கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N.ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.



Quality always tells!

hence BUY **L.G** ASAFOETIDA

எல். ஜி பெருங்காயமே உயர்ந்தது

THE TRUTH IN YOUR HOROSCOPE

YOUR REAL LIFE TOLD FREE

Would you like to know what the Stars indicate for you, some of your past experiences, your strong and weak points, etc? Here is your chance to test FREE the skill of Pundit Tabore India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advise contained in his Horoscopes on business, speculations, Finance, Love affairs, Friends Enemies, Lotteries, Travels. Changes Litigation Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.



To popularise his system Tabore will send you Free your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss). address and date of birth (English Calendar) all clearly written by yourself. No money wanted for Astrological Work, Postage etc., but send about 6 Annas (Stamps) for stationery, testimonials and other interesting literature. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offer may not be made again. No personal interviews, all consulations by mail only. Address: **PUNDIT TABORE (Dept. 337), Upper Forjett Street: Bombay 26.**

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தினதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை மவுண்ட்ரோட், மதராஸ்.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு............................அணு 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க......................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

தந்தி விலாசம்: "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த

"3001" ஜவ்வாது பத்திகள்

இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த

"301" ஜவ்வாது பத்திகள்

நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த

"31" ஜவ்வாது பத்திகள்

ஆரோக்கிய வாழ்விற்கு

"ஆசாத்" பாக்கட் பத்திகள் &

"ஆசாத் ஹிந்த்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,

நெ. 39 லெக்ஷிமிபுரம் 6-வது தெரு, மதுரை
பிராஞ்சு: நெ. 4 அப்பாஜிராவ் தெரு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரிக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம், காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்யம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பூஜை செய்தனுப்புவதால் ஜன்ம நக்ஷத்திரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. பலனில்லையேல் பணம் வாபீசு. விலை ரூ. 3-8.
ஸ்பெஷல் ரூ. 10. தபால் செலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஜோதிடர் ஸாயி ஆஸ்டிரல் ஸ்டூடியோஸ், உறையூர் - திருச்சி.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

(USE ALWAYS)
500 1st. Quality Spade Clover Beedies. 500.
PLEASE LOOK OUT SPADE CLOVER JADI BEEDI FACTORY MANADY MADRAS.
SPADE CLOVER BEEDI
ஸ்பேட் கிளாவர் ஜாடி பீடி பக்டரி, மண்ணடி மதராஸ்.
M. MOHAMED OOMER. 37. MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனுர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து விருத்தியாக்கி, சரீரபுஷ்டியை உண்டாக்கி நிரந்தர வலுவைக் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3-12-0.
பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது.
ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்கு மாட வீதி,
மயிலாப்பூர் — மதராஸ்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆட்டோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285 Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

இனும் ரூ. 100

அற்புத சக்திபெற்ற சித்த கவசம்

இந்த "குப்த பஷிகரன் யந்திரம்"வைத்திருந்தால் ஆண், பெண் யாராயினும் வசீகரிககப்படுவர். நக்ஷத்திர கெட்ட பலன்களை நீக்கிவிடும் பகைவர்கள் அடங்குவர். பரீட்சையில் தேர்ச்சிபெறலாம். வியாபாரம், வழக்கு, லாட்டரி, பந்தயம், வேலை, புத்திரபாக்கியம், தனலாபம் பெறலாம், கடன், வியாதியிராது. பொய்என்று நிரூபித்தால் ரூ.100 இனும். செப்பு ரூ.2-8 வெள்ளி ரூ. 3. சுத்த தங்கம் ரூ. 10.

பொய் என்று நிரூபித்தால் ரூ. 100 அபராதம்.

நரை மயிர்:-சாயத்தை உபயோகிக்காதீர்கள். 60-வருஷங்களுக்கு நிலைத்திருக்கும் எங்கள் அபூர்வ தைலத்தை உபயோகித்து உங்கள் கேசத்தை கறுப்பாக மாற்றுங்கள். தலைவலி குணமாகும். நேத்திரப் பார்வை சமனாகும். சிறு நரை இருந்தால் 2-8-க்கு ஒரு புட்டி வாங்குங்கள், அதிகமானால் ரூ. 3-8.; ரூ. 5. புட்டிகளை வாங்குங்கள் பயனில்லையெனில், இரட்டிப்பு கிரயத்தை வாபஸ் செய்கிறோம்.

AZAD PHARMACY, No. 225,
P. O. Katrisarai (Gaya.)

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறார்:—

"தாங்கள் எனக்கு மேமீ 27-ந் தேதியிலிருந்து ஜூன்மீ 3-ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் *or* கடிதம் எழுதும் நேரம் தேவை. **N. B.** வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க்கணக்கானபேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்திபெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு காதில் இரைச்சல் மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதி பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

சுதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0
தபால் செலவு பிரத்யேகம்
மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

டாக்டர் பால்ஸ் லோடஸ் ஹனி மிக அற்புதமான மூலிகை—கண்ணில் பூ விழுதல், கிளாகோமா, மற்றும் கண் உபாதைகளை மாயமாக குணமாக்கி பார்வையை அதிகரிக்கச்செய்யும். விலை புட்டி 1-க்கு ரூ. 2—8—0.

டாக்டர் பால்ஸ் நயம் கஸ்தூரி : பரிசுத்தத்திற்கு உத்தரவாதம். தோலா விலை ரூ. 80. அரைக்கால் தோலாவிற்குக் குறைந்து சப்ளை செய்ய முடியாது.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணை யில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1. சம்பக் செண்ட்	ரூ. 2–0.	8. ரோஜா செண்ட்	ரூ. 1–8.
2. கியோரா	,, 2–0.	9. சுரங்கி	,, 1–8.
3. காஸ்	,, 2–0.	10. வில்லி	,, 1-0.
4. போகுல்	,, 1–8.	11. லோடஸ்	,, 1–0.
5. ஜாஸ்மின்	,, 1–8.	12. ஆரஞ்சு	,, 1-0.
6. கதம்பம்	,, 1-8.	13. மோதியா	,, 1-0.
7. ஹேனு	,, 1-8.	14. கோலோன்	,, 1–0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers (Dept. S W.) 4, Hospital St., **Calcutta 13.**

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. **ஜாதக யோகங்கள்** என்னும் புத்தகம் வீலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
“தபோநிதி” தியாகராயநகர், மதராஸ் 17.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக் குப்பிறகும் தலைமயிர் அதிக மாகக் கொட்டுவதுணடு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுர மானுலும் மயிர் அபரிமிதமா கக் கொட்டும். சில சமயம் கூந்தல் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரணத்தால் மயிர் உதிர்ந்த போதிலும் கேசவர்த்தினி யைக்கொண்டு மயிர் உதிர் வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக்கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினி யின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேச மாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணு 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,
“ஆச்ரமம்”, க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

சியாமா சாஸ்திரி கிருதிகள்

சியாமா சாஸ்திரி கிருதிகளும், அவரது பரம்பரையினரது கிருதிகளும் அவரது கொள்ளுப்பேரனிடமிருந்து கற்றுக்கொண்டபடி சம்பிரதாயமான முறையில் மிஸஸ் S. வித்யா, B. A. L. T., அவர்களால் தொடுக்கப்பெற்றது. தமிழில் கமக ஸ்வரங்களுடன் கூடிய மூன்ருவது வால்யூம் வெளிவந்துவிட்டது.

தமிழ், சம்ஸ்கிருதம், தெலுங்கில் சாஹித்யங்கள், சம்ஸ்கிருதம், தமிழில் சரிகம ஸ்வரங்களுடன் வீணை கமகங்களும் குறிக்கப்பட்டு, ராகபாவத்துடன் பாடக்கற்பிப்பது. முதல் இரண்டு வால்யூம்கள் வாங்கினவர்களைத் தவிர்த்து எல்லா வால்யூம்களையும் சேர்த்து ஆர்டர் செய்வோருக்கே வி. பி. பி. யில் அனுப்பப்படும். நெ 46, எட்வர்ட் எலியட்ரோட், மயிலாப்பூர், மதராஸ் விலாசத்தில் கிடைக்கும். ரிஜிஸ்திரேஷன் தபாற்செலவு தனி. அரை காலிகோ பைண்டு 9X11 சைஸ் நிகர விலை Vol. I. (ஆங்கில முன்னுரையுடன்) ரூ. 3-8-0. Vol. II. ரூ. 4. Vol. III. ரூ. 4-8-0. பக்கங்கள் முறையே 72, 84, 88. பெதர்வெயிட் காகிதமானல் ஒவ்வொரு வால்யூமிற்கும் அணு 8 தனி.

மொத்தம் சியாமா சாஸ்திரி கிருதிகள் 42. சுப்பராய சாஸ்திரி 11. அண்ணுசாமி சாஸ்திரி 8. தீக்ஷிதரைப்பற்றிய சங்கீத சம்பிரதாய பிரதர்சினிக்கு சமமான புத்தகம். திருவாங்கூர் தர்பாரைச்சேர்ந்த சங்கீதப்பள்ளிகளில் உபயோகப்படுவது.

ஸ்ரீ சாயிநாதய நம :

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ.	5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,,	1.
விவாக பொருத்தம்பார்க்க	,,	3.
ஆயுள் பலன் எழுத	ரூ.	100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.



நவீன மோஸ்தர்களில் புராதன அழகு





அமைப்பின் அழகு, சிறந்த தரம், கைதேர்ந்த வேலைப்பாட்டுக்கு எமது ஐம்பது வருஷ அனுபவம் உத்திரவாதம். எப்பொழுதும் உதவிபுரிய தயாராக இருக்கிறோம்.

உம்மிடி

ராமையா செட்டி குருஸாமிசெட்டி & கோ.

D.J.S 102 T.@.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினலோ வேலையினலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியாரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936.)

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆனி௴ 14௳ ★ 1948-௵ ஜூன்௴ 27௳ No 22

புதிய கவர்னர் ஜெனரல்

சென்ற 21-ந் தேதி நம் தலைமுறையிலேயே ஒரு தனிப் பெரும் நன்னாள்! சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சார் இந்திய ஆட்சியின் சிகரத்தை அலங்கரித்த அருமையான தினம் அது. நாமிருக்கும் நாடு நமதென்றாகிவிட்ட நிலைமையில் இந்தியாவின் தலைமைப் பதவி நம்மவருக்கு வந்துவிட்டதில் என்ன புதுமையிருக்கிறது என்று அன்றொரு நாள் ராஜாஜியே நினைப்பூட்டினார். சுதந்தரம் அடைந்த கையோடு கவர்னர் ஜெனரல் பதவியும் இந்தியர் கைக்கே வந்திருக்கலாம். ஆனால் பண்டித நேரு சர்க்காரின் வேண்டுகோள்படியிலேயே மவுண்ட் பாட்டன் பிரபு சென்ற 15 மாதங்களாகக் கவர்னர் ஜெனரல் பதவியைத் தாங்கி வந்தார்.

மவுண்ட் பாட்டன் தமது பதவிக் காலத்தில் ஆற்றியிருக்கும் தொண்டையும், செய்த உதவியையும் இந்தியா என்றும் மறக்காது. பண்டித நேருவும், புதிய பதவியை ஏற்றிருக்கும் ராஜாஜியும் மவுண்ட்பாட்டனைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் பாராட்டு நிறைந்த அபிப்ராயங்களைவிட அதிகமாக எதையும் சிறப்பாகச் சொல்வதற்கில்லை.

இந்த மாதத்தில்தான் பிரிட்டிஷ் ஆட்சி முடிவுற்றிருக்கவேண்டும். ஆனால் பத்து மாதங்களுக்கு முன்னதாகவே வெளியேறுவதென்று அவர்கள் பின்னர் முடிவுசெய்தனர். வெளியேறுவதில் அவர்கள் இவ்வளவு அவசரம் காட்டக்காரணமென்ன? தங்களுக்குச் சொந்தமாகப் போதிய பலமுமில்லை. இந்நாட்டில் ஆதரவுமில்லை; முன்னதாக வெளியேறிவிடவேண்டுமென்ற உணர்வு மேலோங்கியிருக்க வேண்டும். வெளியேறுகையில் சமஸ்தானங்களால் இந்திய யூனியனுக்குத் தலைவலி ஏற்படும்படி விட்டுச் சென்றது எந்த அளவு நியாயம்? இத்தகைய பிரச்னைகள் ஏற்கெனவே பல வகையான நோக்குகளுடன் விவாதிக்கப்பட்டவைதான். ஆனால் அத்தகைய அம்சங்களில் தொடுக்கக் கூடிய புகார்கள் அனைத்துக்கும் பிரிட்டிஷ் சர்க்காரே இலக்காகக்கூடும். இவற்றில் மவுண்ட்பாட்டன் பிரபுவின் பெயரை இணைப்பதற்கில்லையென்பது தெளிவு.

அதற்கு மாறாக அதிகார மாற்றத்தைப் பொறுத்தவரை, பிரிட்டிஷ் சர்க்காரது முடிவை மௌண்ட்பேட்டனைவிட ஜரூராக வேறு எந்த ஆங்கிலேயரும் நிறைவேற்றி வைத்திருக்க முடியாது. இன்றுவரை வந்த கவர்னர் ஜெனரல்களில் இவரைப்போல் இவ்வளவு சொற்பகாலம் பதவி வகித்தவர் யாருமில்லை. எனினும் இவரது பதவிக் காலத்தைப்போல் சரித்திரத்தில் முக்கிய ஸ்தானம் பெறக்கூடியது வேறு எவருடையதுமில்லை. இவரது பதவிக் காலத்தில் இந்திய சர்க்காரை எதிர்ப்பட்ட பிரச்னைகள் மகத்தானவை. எனினும் அவர்கள் மனந்தளரவில்லை. குறிப்பாக அகதிகள் பிரச்னை, சமஸ்தானங்களைப் பற்றிய சிக்கல் முதலியவற்றை அவர்கள் இதுவரை தீர்த்துள்ள அளவே ஒரு அற்புதம். இதில் தங்களுக்கு மவுண்ட்பாட்டன் செய்து வந்துள்ள உதவி விசேஷமானதென்று நேரு சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பதுபோல, சுதந்திர இந்தியாவை நிர்மாணிப்பதில் தம்மாலானவரை அந்தரங்கமாக ஒத்துழைத்த ஒரு தனிப்பட்ட பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் என்ற முறையில் அவர் இந்திய நெஞ்சில் ஒரு நிலையான ஸ்தானம் பெற்றுவிட்டார்.

— அடுத்த பக்கம்



கவர்னர் ஜெனரல் ராஜாஜி கல்கத்தாவிலிருந்து டில்லி விமானகூடத்தில் வந்திறங்கியபோது எடுத்த படம்.

ராஜாஜி முதன் முதலான இந்திய கவர்னர் ஜெனரலானது கண்டு நாடே பூரிக்கிறது. உண்மையில் தேசப்பிரதிநிதிகளே அவரை அப்பதவிக்குத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். எனவே புதிய அரசியல் சட்டத்தையொட்டிய விதி முறைப்படி அவர் ஜனாதிபதியல்லவாயினும் உண்மையில் அவர் ஜனாதிபதியே தான். அவரது மேதையும், நிர்வாகத் திறமையும் ஏற்கெனவே பிரபலமானவை. மேலும் எதிரிகள் என்று கருதப்படுவோரையும், காந்தி வழியால் தம் வசப்படுத்தக்கூடிய மனோபக்குவத்தில் அவரை மிஞ்சியவர் யார்? வங்காளத்தில் அவர் கவர்னராக நடந்து கொண்ட முறை ஒப்பற்றது. தற்போது தேசத்தின் முன் உள்ள பிரச்னைகள் பலவகையானவை. இரண்டொன்று அபாயமானதும் கூட. இந்நிலையில் ராஜாஜி கவர்னர் ஜெனரலானது மக்களுக்கு மிக்கத் தைரியமளிக்கும் என்பது திண்ணம். அவர் பதவியேற்றதும் வெளியிட்டுள்ள கருத்துகள் அந்த தைரியத்துக்கு இன்னும் ஆக்கமளிக்கக் கூடியவையாகும். அவ்வப்போது தக்க ஆலோசனை கூறுவதன் மூலம் சர்க்கார் திறம்பட இயங்க அவர் விசேஷமாக உதவக்கூடும். இதில் மக்கள் அவரிடம் கொண்டுள்ள நம்பிக்கையை அவர் முற்றிலும் பூர்த்தி செய்வாரென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.



புதிய கவர்னர் ஜெனரல் ராஜாஜி விமானத்தில் வந்திறங்கியதும் அவரை வரவேற்கக் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பிரதம மந்திரி நேரு, ராஜன்பாபு முதலிய நல்லவர்கள் காத்திருந்தார்கள்.



புதிய கவர்னர் ஜெனரலுக்கு பண்டித நேரு, ராஜன்பாபு, இந்திய டொமினியன் மந்திரிகள் ஆகியோரை அறிமுகப்படுத்துகிறார்.



தமக்களிக்கப்பட்ட ராணுவ அணிவகுப்பில் கவர்னர் ஜெனரல் மரியாதை செலுத்துகிறார்.

இந்தியாவின் அன்பைப் பெரிதும் கவர்ந்து தலைவர்களின் நன்மதிப்பை விசேஷமாகத் தேடிக்கொண்ட மவுண்ட்பாட்டன் தம்பதிகளையும், அவர்களது குமாரியையும் பிரதம மந்திரி நேரு வழியனுப்பச் செல்லுகிறார்.

மாதர் மஹா சபை

— குந்தமம்

'யாரடி அது, கனகாவா? வாடியம்மா வா, உட்கார். எங்கேயடி கண்ணிலேயே காண்கிறதில்லை?' என்று அங்கு வந்த கனகாவை வரவேற்றாள் ருக்குவின் மாமியார்.

'வராமலென்ன மாமி! ஒழியவில்லை. இல்லாவிட்டால் கிராக்கியா என்ன? அந்தக் குகையில் அடைபட்டுக் கிடப்பதைவிட பொழுதுபோக்காக இங்கு வந்துவிட்டுப் போவதற்குகசப்பாஎன்ன?' என்றாள் கனகா.

'அது மாத்திரம் வாஸ்தவந்தான். இப்படி மழையே இல்லாமல் வறுத்தெடுக்கிற வெய்யிலில் இந்த 'ஒண்டுக்குடித்தனக்காரர்கள்' எப்படித்தான் கொத்தவால் சாவடி மாதிரியுள்ள இந்தச் சின்னச்சின்ன ரூம்களில் இருக்கிறார்களோ பாவம்! புருஷர்களானாலும் ஆபீஸுக்குப் போய்விடுகிறார்கள். இந்தஸ்திரீகள்பாடு ரொம்ப கஷ்டம்தான்' என்றாள் ருக்குவின மாமியார்.

'அதைதான் எங்கள் ராஜுவும் சொல்கிறான். ஞாயிற்றுக் கிழமைகூட ஆபீஸ் இருக்கக் கூடாதா என்று' என்றாள் விமலா.

'வீட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இப்படி லீவைக்கூட வேண்டாமென்று சொல்லும்படி ஆகிவிட்டது பார்த்தாயா? ரொம்ப கஷ்ட காலம்' என்றாள் சாந்தா.

'அதென்ன அப்படி இழுத்த மாதிரி சொல்கிறாயே? என்னமோ பங்களாக்களில் இருப்பவர்கள் அதிகக் கஷ்டம் தெரியாமல் இருக்கிறார்களோ என்னமோ, காற்று வசதி இல்லாமல் நெருக்கமான இடங்களில் இருப்பவர்களுக்கு இனி வேறு நரகமே கிடையாதென்றுதான் மூன்றாவது அகத்து மாமி சொல்கிறாள். அப்படியே புழுங்கித் தவிக்கிறார்களாம் போங்களேன்,' என்றாள் பானு.

'இப்படிப் பல குடித்தனங்கள் ஒரே வீட்டில் இருப்பதைத் தடைசெய்ய சட்டம் ஒன்றும் கிடையாதா? ஒரு பாடசாலைக்கோ ஒரு சினிமா கொட்டகைக்கோ இவ்வளவு ஜனங்களுக்கு இவ்வளவு சதுர அடி இடம் வேண்டும் என்ற நிபந்தனையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்களே, அது மாதிரி இவ்வளவு பெரிய வீட்டில் இத்தனை குடித்தனங்கள்தான் இருக்கவேண்டுமென்று நிபந்தனைகள் ஏற்படுத்தக்

ருக்கு சொல்லுகிறாள்

★

'இதென்னடி இது! கல்யாணியா? அப்படியே தாயார் சன்னிதியில் மூலஸ்தானத்தில் கொண்டு உட்கார வைத்து விடலாம்போல் இருக்கிறது' என்றேன்.

'ஏன், காதில் போட்டுக் கொண்டு வந்திருக்கிறேனே, அதற்குச் சொல்லுகிறாயா? உனக்கு எல்லாம் பரிகாசம் தான். எல்லாரும் போட்டுக் கொள்கிறார்கள். எனக்கு மாத்திரம் போட்டுக்கொள்ள வேண்டுமென்று ஆசையாக இருக்காதா?' என்றாள் காதில் தாயாருக்குப் போட்டிருக்கும் கர்ணபத்திரம் மாதிரி, கம்மல் போட்டுக் கொள்ளும் இடத்தில், வண்டி சக்கரம் மாதிரி தந்தத்தினால் செய்யப்பட்ட ஒரு 'சக்கரத்தைப்' போட்டுக் கொண்டிருந்த கல்யாணி.

கல்யாணி சொல்வதை நான் குறைகூறவில்லை. ஆடை, ஆபரணங்கள் அணிந்து கொள்வதில் தேசாசாரத்தையும் கவனிக்க வேண்டும். இந்த வண்டி சக்கரங்களை வடக்கத்தியார்கள் அணிந்து கொண்டு வந்தால் ஏதோ பார்த்துச் சகிக்கலாம்போலிருக்கிறது. அது அவர்களுடைய நடை, உடை, பாவனை, தேக அமைப்புக்குப் பொருத்தமாக இருக்கலாம். அதைப் பார்த்துவிட்டு நாம் காப்பியடித்தால் நன்றாக இருக்குமோ? நம்முடைய நடை உடை பாவனை வேறு. என்னதான் சொல்லுங்கள், ஒரு கம்மல் அணிந்துகொள்ளும் அழகு இதில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இதுவே இன்னும் யாருக்காவது நன்றாக இருக்குமோ என்னவோ, நம்ம ரீதியில் உடுத்திக்கொண்டிருக்கும் கல்யாணிக்கு அடியோடு நன்றாக இல்லை.

"........வெட்க மென்னடி ? சிறுகுழந்தையாயிற்றே........."

கூடாதோ சர்க்காரில்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதெல்லாம் இல்லாமலிருக்குமா என்ன?' என்றாள் கனகா.

'அப்படியானால் ஏன் இப்படி தவிக்கவேண்டும்?' என்றாள் சாந்தா.

'நன்றாகச் சொன்னாய். நீ எந்த யுகத்தில் இருந்துகொண்டு பேசுகிறாய்? லஞ்சம் தலைவிரித்தாடுகிறகாலம் என்று சர்க்காரே சொல்கிற காலம் ஞாபகமிருக்கட்டும்' என்றாள் சரோஜா.

'அதெப்படியாவது போகட்டுமடி, இடம் என்று கிடைத்தால் போதும், எந்தக் கஷ்டத்தையும் சகித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறவர்கள் எத்தனையோபேர்கள் இருக்கிறார்கள். என்ன உனக்கு வீட்டைவிட்டுவர ஒழிவில்லாமல் அப்படிப்பட்டவேலை?' என்று கனகாவைப்பார்த்துக் கேட்டாள் ருக்குவின் மாமியார்.

கனகா சிறிது நேரம் பதில் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்.

'வெட்கமென்னடி? சிறிய குழந்தையாயிற்றே, கல்யாணப் பேச்சை எடுத்தால் தலையைக் குனிந்துகொண்டு உள்ளே ஓடிப்போய்விடுவதற்கு? வயது இருபதாகிறது, கல்யாண காலமில்லையா மாமி. பெண்ணைப் பார்த்துவிட்டுப் போவதற்கு யாராவது வந்து போய்க்கொண்டேயிருக்கிறார்கள். அதனால் வர ஒழியவில்லை' என்று சொல்லேன். இதற்கு வெட்கமென்னடி?' என்றாள் சரோஜா.

'என்ன ஏதாவது நிச்சயமாயிற்றா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'எங்கே பெண்ணை வந்து பார்ப்பதும், போவதுமாக இருக்கிறார்கள். இன்னும் ஒன்றும் நிச்சயமாகவில்லை. நேற்று யாரோ வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். அநேகமாக இது முடியலாம் என்று தோன்றுகிறது. கனகா சொல்லாவிட்டால் போகிறாள். என்னைக் கேளுங்கள் மாமி அவாத்துக் கதையெல்லாம்' என்றாள் சரோஜா.

'அதெப்படியடி உனக்குத் தெரியும்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'நாங்கள் எப்படி முக்கால் வாசிப் பொழுதை உங்காத்தில் போக்குகிறோமோ, அதேமாதிரி கனகாவின் பாட்டி முக்கால் வாசிப்பொழுதை எங்காத்தில் கழிக்கிறாள். ஒரு எழுத்துகூட விடாமல் எல்லாவற்றையும் அப்படியே ஒப்பித்துவிட்டுப் போகிறாள்' என்றாள் சரோஜா.

'இந்தமாதிரியா முன்பெல்லாம் தினம் தினம் பெண்ணை வந்து பார்த்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் வருவார்கள். ஏதாவது ஒன்று முடிவாகும் ஆனாலும் இந்த மாதிரியா? வேடிக்கையாகத்தான் இருக்கிறது என்றாள் ருக்குவின் மாமியார்.

'இதுகூட அவ்வளவு வேடிக்கை இல்லை. கனகாவின் பாட்டி சொல்லிக் கேட்கவேண்டும். சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிடும். கனகாவைச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்லுவாள். பெண்ணைப்பார்க்க வருகிறவர்கள், பழம், புஷ்பம், வெற்றிலைப் பாக்கு, ரவிக்கைத்துண்டு எல்லாம் வாங்கிக்கொண்டு வருவார்களாம். பெண் அவ்வளவாகப் பிடித்தமில்லைபோல் தோன்றினால் ரவிக்கைத்துண்டு கொண்டுவந்ததாகவே காட்டிக்கொள்ளாமல் பழம், புஷ்பம் முதலியவைகளை மாத்திரம் ஒரு தட்டில் வைத்துக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்களாம். பெண் அடியோடு பிடிக்கவில்லையென்று தோன்றினால் பழம், புஷ்பம்கூடக் கொடுக்காமல், உடனே அதிக வார்த்தைகூடச் சொல்லாமல் திரும்பிவிடுவார்களாம் என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில் ஆமாம். பாட்டிக்கென்ன, வாய்க்குச் சுளுவாகச் சொல்லிவிடுகிறாள். இதேமாதிரி நூறு இடங்களில் போய்ப் பெண்களைப் பார்க்க வேண்டியிருக்கும். பார்க்கிற இடத்திலெல்லாம் பழம், புஷ்பம், ரவிக்கைத்துண்டு வைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறதென்றால் நடக்கக்கூடிய காரியமா அது? என்றாள் பானு.

'ஆமாம். சுலோசனாவுக்கு அப்பொழுதே கல்யாணம் நிச்சயமாகிவிட்டதென்று சொன்னார்களே! ஏன் இன்னும் கல்யாணம் ஆகவில்லையா?' என்று

கேட்டாள் ருக்குவின் மாமியார்.

‘காலி வீடு ஏதாவது வைத்துக்கொண்டிருக்கிறீர்களா?’ என்றாள் சரோஜா.

‘வரவர ஜனங்களுக்கு இது ஒரு பெரிய ஹாஸ்யமாகப் போய்விட்டது. ஆமாம். காலி வீட்டுக்கும் அவள் கல்யாணத்துக்கும் என்னடி சம்பந்தம்?’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘என்ன மாமி, திடீரென்று இப்படி ஒருநாளுமில்லாத ஒரு கோபம்?’ என்றாள் சரோஜா.

‘இல்லாமலென்னடி. எந்த வார்த்தையை எடுத்தாலும் ‘வீட்டில்’ தான் போய் முடிவு. ஒருநாளாவது இந்த வீட்டுக் கஷ்டத்தைப்பற்றிக் கேட்காமல் சற்று நிம்மதியாக இருக்கமாட்டோமா என்றிருக்கிறது. கேட்டுக் கேட்டு அவ்வளவு அலுத்துப்போய் விட்டதடியம்மா’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘உங்களுக்குக்காதால் கேட்பதற்கே இப்படி இருக்கிறது. அவரவர்கள் நேரிலேயே அனுபவிக்கிறார்களே அவர்களுக்கு எப்படியிருக்கும்?’ என்றாள் பானு.

‘கஷ்டந்தானடியம்மா. இருக்காதென்று யார்சொன்னார்கள்? அதற்காக எடுத்ததற்கெல்லாம் அதையே சொல்லிக்கொண்டிருந்தால் ஒரு சமயம் இல்லாவிட்டாலும் ஒரு சமயம் எரிச்சல்தான் வருகிறது. ஆமாம். மறுபடியும் தான் கேட்கிறேன். காலி வீட்டுக்கும் சுலோசனா கல்யாணத்துக்கும் என்னடி சம்பந்தம்? என்றாள் ருக்குவின் மாமியார்.

‘அப்படிக் கேளுங்கள் மாமி. அப்படிக் கேளுங்கள். சொல்கிறேன். சுலோசனாவுக்காகப் பார்த்திருக்கும் பையன் இங்கே ஏதோ ஒரு கம்பெனியில் வேலையில் இருக்கிறான். ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். தாயார், தகப்பனார் கிராமத்திலிருக்கிறார்கள். முன்காலம் மாதிரியா கலியாணம் செய்தால் இரண்டு, மூன்று வருஷம் கழித்துப் பெண்ணைப் புக்ககத்தில் கொண்டு விடுவோம் என்பதற்கு. கல்யாணம் செய்வதற்கு ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னாலேயேகொண்டு விட்டிருக்க வேண்டும் என்ற ரீதியில் பெண்களுக்குக் கல்யாணம் ஆகிறது. கல்யாணம் ஆகி எப்பொழுதடி அம்மா இந்தப் பெண்ணைப் புக்ககத்தில் கொண்டு விடப் போகிறோம் என்ற கவலையில் பெண்ணுக்குக் கல்யாணம் ஆகிறது எப்பொழுதுடா அப்பா இந்த ஹோட்டல் சாப்பாட்டை விட்டுவிட்டு, பிறத்தியார் தயவை எதிர்பார்க்காமல் குடியும் குடித்தனமுமாக இருக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் பிள்ளையும் கல்யாணத்தைச் செய்துகொள்கிறான். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கல்யாணம் ஆனவுடனே பெண் ஒரு நிமிஷம் பிறந்தகத்தில் இருக்கமுடியுமோ? கல்யாணம் ஆனவுடனே அகமுடையானுடன் தனிக்குடித்தனம் செய்ய வேண்டியதுதான். இந்த ரீதியில்தான் இருக்கிறது சுலோசனாவின் கல்யாண விஷயமும். பிள்ளை வீட்டுக்காரர்களால் கொஞ்சமும் தடையே இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் செய்துகொள்கிறேனென்கிறார்கள். வீடு கிடைத்துதானே கல்யாணத்தைச் செய்துகொள்ளவேண்டுமென்கிறான் பிள்ளையாண்டான்’ என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில், ‘இல்லாவிட்டால் கல்யாணம் ஆன மறுநாளே மாமனார் வீட்டோடு வந்து விடுகிறேன் என்கிறான் மாப்பிள்ளைப் பேர்வழி’ என்றாள் பானு.

எல்லோரும் கொல் என்று சிரித்து விட்டார்கள்.



“.....பெண் அடியோடு பிடிக்கவில்லை என்று தோன்றினால்.....”

'நீ சொல்லடி மேலே' என்ருள் ருக்கு.

'அவனும் ஒரு வருஷகாலமாக வீடு பார்க்கிருன். சென்னப்பட்டணம் முழுவதிலும் 'சல்லடை போட்டுச் சலித்து பார்த்துவிட்டான்' என்று சொல்வார்களே அந்தமாதிரி ஒரு வீடு பாக்கியில்லாமல் கேட்டுப் பார்த்துவிட்டான். எங்கும் அகப்படவில்லே. அப்படி எங்காவது காலி இருந்தால் 500, 1000 அட்வான்ஸ் கேட்கிருர்களாம்' என்று சரோஜா சொல்லி முடிப்பதற்குள்ளே, 'அப்படியானுல் இனி பிள்ளே வீட்டுக்காரர்கள் வரதக்ஷிணே, சீர், செனத்தி கேட்பதோடு வீட்டுக்காக அட்வான்ஸ் பணமும் ஒரு 'ஐடம்' என்று சொல்' என்ருள் ருக்கு.

'அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். முதலில் அந்தப் பிள்ளே வரதக்ஷிணே ஒன்றும் கேட்கவில்லேயாம். இப்பொழுது வீட்டுக்காக அட்வான்ஸ் ஆயிரம் ரூபா கேட்கிறதாம்' என்ருள் சரோஜா.

'வாஸ்தவந்தான், அதுதான் என்ன செய்யும் பாவம்! தாயார், தகப்பனுர் ஏழை. அவர்களே எதிர்பார்ப்பதில் பலனில்லே. தான் சம்பாதிப்பதிலும் மிச்சப்படுத்தும் அளவுக்குப் பணம் வரவில்லே. மாமனுரைத்தானே கேட்கவேண்டும்? அட்வான்ஸ் கொடுக்க முடியவில்லேயா, நீங்களே ஒரு வீடு பார்த்துக் கொடுத்துவிடுங்கள். என்னுல் ஒருவித வஞ்சனேயுமில்லே. இருக்கப்பட்ட நிலேமை இது. ஏன்? நான் சொல்வது என்ன? இதைத்தானே சொல்கிருன் பையன்' என்ருள் பானு.

'அதேதான். பாவம், சுலோசனுவின் தகப்பனுரும் பெரிய குடும்பி. இதற்கப்புறம் இன்னும் மூன்று பெண்கள் கல்யாணத்துக்கு இருக்கின்றன. சொற்ப சம்பளக்காரர். என்ன செய்வார் பாவம்! பையன் தங்கமான பையன். குலம், கோத்திரம், அழகு எல்லாம் இருக்கிறது. இவனுக்கே சுலோசனுவைக் கொடுத்து விட வேண்டுமென்று முடிவு செய்துவிட்டார். வீட்டுக்கு அட்வான்ஸ் பணத்துக்காக அலேந்துகொண்டிருக்கிருர். அது கிடைத்துவிட்டால் கல்யாணம் ஆகிவிட்டமாதிரிதான்' என்ருள் சரோஜா.

'வர வர எல்லாம் விசித்திரமாகத்தான் இருக்கிறது,' என்ருள் ருக்குவின் மாமியார்,

'ஆமாம், நாளேக்கு ருக்கு ஊருக்குப் போவது நிச்சயந் தானு?' என்ருள் பானு.

'நிச்சயந்தான்,' என்ருள் ருக்குவின் மாமியார்.

'அவள் குஷாலாகத்தான் போகிருள். நம்மபாடுதான் திண்டாட்டம்,' என்ருள் சரோஜா.

'எல்லாம் நாளேக்குத்தான் தெரியும். அதோ அவர் வந்துவிட்டார்' என்று எழுந்தாள் ருக்கு.

—●—

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக விருந்து நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொண்டு சென்ற வாரம் மவுண்ட்பாட்டன் பிரபு லண்டன் சென்ருர். அவரது மனேவியும், பெண்ணும் அவரோடு சென்றனர்.



நாமொன்று நினைக்க —.

ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ.பி.எல்.

காந்திமதி ஸீதாராமனிடம் சகஜமாய்ப்பழகுவது வழக்கம். அவனிடம் ஸமஸ்கிருதம் கேட்டுக் கொள்வாள். ராமநாதனிடம் "போ, வா," என்று பேசுவதுபோல் அவனிடமும் விகல்பமில்லாமல் பேசுவாள். ஆனால் செல்லம் அங்கு வந்தபிறகு அவள் பழகுவது சற்று மாறுதலடைந்தது. முன்போல் அதிகம் நெருங்குவதில்லை. விளையாட்டுப் பேச்சுக்கள் நின்றன. அவன் ரூமுக்கு வருவதில்லை. எப்போதாவது பேசுவது அவசியமானால் ஆங்கிலத்தைத்தான் பிரயோகிப்பது. "மிஸ்டர் ஸீதாராமன்! வில்யூ ப்ளீஸ்?" என்று ஆரம்பிப்பாள். ஏனென்றால் ஆங்கிலத்தில் ஏக வசனப் பிரயோகத்திற்கும் பகு வசனப்பிரயோகத்திற்கும் பேதமில்லை. "நீ" என்று அவனைப்பேசுவது அவளுக்கு உசிதமாய்ப் படவில்லை. "நீங்கள்" என்று பேசுவதும் சம்மதமில்லை. இந்த தர்ம சங்கடத்தில் ஆங்கிலம் உதவியாயிருந்தது. செல்லமோ ஸீதாராமனுடன் பேசிப் பழகுவதே அரிது. ஒரே ஊர் ஆனதால் ஒருவரையொருவர் அறிவார்கள். ஆனால் ஊரிலும் இருவரும் பேசிப்பழகியது கிடையாது. மேலும் செல்லத்தின் அந்தஸ்திற்கு சேஷு சாஸ்திரிகள் பிள்ளை ஒரு அணிப்பிள்ளை, தென்னம்பிள்ளையாகத் தோன்றினான். தகப்பனாரின் கர்வம் அவளுக்குக் கொஞ்சம் உண்டு. காந்திமதியும் அவள் பழக்கத்தால் தன்னிடம் உதாசீன புத்தியுடையவளாக மாறுவதுபோல் ஸீதாராமனுக்குப்பட்டது. "ஆனால் முன்போல் காந்திமதி குழந்தையா!" என்று அவன் மனதிற்குச்சமாதானம் சொல்லிக்கொண்டான். இருந்தாலும் அந்தப்பெண்கள் ஜோடி சேர்ந்தபிறகு விட்டிலேயே வேறு மதிக்கத்தக்க மனுஷ்யர்கள் இல்லைபோல் அவர்கள் நடந்து கொள்வதாகச் சீதாராமனுக்குத் தோன்றியது. "சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை" என்ற பாட்டிகாலத்துப் பழமொழியைக் கிழித்துக் குப்பையில் போடும் காலம் வந்துவிட்டதென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். செல்லம் தன்னைப் பொருட்படுத்தாத இறுமாப்புக்காரி என்றும் காந்திமதி அவளுடைய சேர்க்கையில் வரவரத் தன்னிடம் நட்புக்குன்றி உதாசீன பாவனையை மேற்கொள்வதாயும் நினைத்துக்கொண்டு அவன் வருந்தினான். பொதுவாய்ச் செல்லம் அக்குடும்பத்தில் வந்து ஒட்டிக்கொண்டதுமுதல் ஸீதாராமனின் உறுதி தளர்ந்தது. தன்னைக்கூடிய சீக்கிரத்தில் ராமநாதனும் உபேக்ஷை செய்ய நேர்ந்துவிடுமோ என்று அஞ்சினான். மாமா சிவராமன் வரும்காலத்திற்கு திட்டம் போட்டிருந்தது யாரும் எளிதில் ஊகிக்கக்கூடியதே. முறிந்துபோன தன் நிலைமையில் செல்லத்தை வீசி ராமநாதனைப்பிடித்து வெங்கிடசுப்பய்யரை ஆக்ரமிக்க அவன் திட்டம் போட்டிருந்தான். இந்தச் சதியைச் செல்லம் இயற்கையில் அறிந்து அதில் கலந்துகொண்டாளே ஒழிய அவளிடம் வியக்தமாய் அதுவற்புறுத்தப்படவில்லை. ராமநாதன் தன்னைப்பற்றிய சதியை சந்தேகிக்கவில்லை. மேல் பட்டையைக்கீறி உள்ளே பரிசோதிக்கும் ஸூக்ஷ்மபுத்தி அவனுக்கில்லை. சீதாராமனின் புத்தியோ ஒருஅபாய அறிவிப்புக்கருவி போல் ஸதா விழிப்புடையது. அவனுக்கு இந்தச் சூழ்ச்சிநிலை எல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கியது. மாமா சிவராமன் அடிக்கடி பட்டணம் வருவதும், வெங்கடசுப்பையரின் பணத்தேக்கத்திற்கு சியாமளாம்பாபுரத்தில் நஞ்சை புஞ்சை தோட்டம் மனைகள் மூலம் பரிகாரம்தேட சிரத்தை எடுத்துக் கொள்வதும் ராமநாதனின்செலவுகளுக்கு உதவுவதும், அவனைத் தட்டிக்கொடுத்து அவனுக்குப் பரிந்து பேசுவது—எல்லாம் ஒரே நோக்கத்தின் பிரகடனங்கள் என்பதை அவன் அறிவான். ராமநாதனுக்கும் தன் விவாஹத்தைப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் காதில் விழாமலில்லை. மாமா சிவராமனே அவனைச் சிலசமயம் தமாஷாய் "மாப்பிள்ளை" என்று கூப்பிடுவது வழக்கம். ஆனால் ராமநாதனுக்குத் தன் விருப்பு வெறுப்புகளை ஆராய்ந்து அறியும் பக்குவம் வரவில்லை. கல்யாணம் ஒன்று உண்டென்றும் அதில் செல்லம் முன்னணியில் நிற்கிறாள் என்றும் அவன் உணர்ந்தான். செல்லத்தைப்போல் பல பெண்களும் பின்னே வரிசை வரிசையாய் காத்திருக்கிறார்கள் என்றும் ஒருவாறு அவனுக்குப் புலனாயிற்று. ஆனால் தன் நாயகியைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றாவது அந்தத் தேர்தலுக்கு முறை என்னவென்றாவது, தன் வாழ்க்கைச் சுகதுக்கங்கள் அதைப் பொருத்தவை என்றாவது ஊன்றி உருப்படுத்தி அவன் சிந்திக்கவில்லை. தான் பெரிய தோரணையில் வாழ்க்கையை நடத்தப்போவதாகவும், அழகிய பெண்ணை மணந்து ஒப்பற்ற இன்புறப்போவதாயும் ஒரு நிர்

ணயம் அவனை உத்ஸாகப்படுத்தி வந்தது.

சீதாராமன் ராமநாதனுடைய மடமையை அறிவதுடன், அவன் பெற்றோர்களின் அந்தரங்க மனோபாவங்களையும் இடை போட்டு வைத்திருந்தான். முக்கியமாய் வெங்கடசுப்பய்யரின் ஹ்ருதயத்தில் ஓடும் நிழல்கள் அவன் கவனத்திலிருந்து தப்பவில்லை. மாமா சிவராமன் அவருடைய ஆழ்ந்த சிந்தனைகளை அறிய வல்லவனல்ல என்பது சீதாராமனின் அபிப்ராயம். ஆனால் சங்கரி அம்மாள் உடந்தையாயிருந்தால் மாமா வெற்றி பெற்று விடலாம் என்பதை ஸீதாராமன் ஒப்புக்கொண்டான்.

அந்த வெற்றி கைக்கெட்டாது என்றுதான் அவனுக்குத் தோன்றிற்று. சங்கரியம்மாள் தம்பியின் அட்டகாசங்களை அறியாதவளல்ல. குடும்ப நேர்மையையும், பெருமையையும் வளர்க்கக் கருத்துள்ள அவன் முடிவில் அசட்டுத்தனம் போகமாட்டான் என்பது அவள் துணிபு.

மாமா சிவராமன் செல்லத்திற்கு ஒரு வைர பேஸரி வாங்குவதற்காகவும் இன்னும் பல ஜோலிகளுடனும் பட்டணம் வந்ததாகச் சொல்லிக்கொண்டார்.

“என்னடா இப்போ திடீரென்று பேஸரி? பணம் மிதமிஞ்சிக் கிடக்கிறதோ?” என்று குத்தலாய்க் கேட்டாள் சங்கரி.

“இல்லை அக்கா—கல்யாணம் பண்ணவேண்டுமோ இல்லையோ? அதற்காகத்தான் ஒன்றொன்றாய்—”

“கல்யாணம் நிச்சயம் பண்ணிவிட்டாயோ?”

“நிச்சயம்தான். என்னாலே, அக்கா, வரன் கிரன் பார்க்கமுடியாது, கையிலே வரன் இருக்கும்பொழுது, வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவது போல்—”

“அப்படி உன் கையில் ஒரு வரன் மாட்டிக்கொண்டிருக்கிறதா என்ன?”

“நான் தீர்மானம் பண்ணுவது கிடக்கட்டும். கல்யாணம் செய்து கொள்கிறவர்கள் தீர்மானம் செய்துவிட்டார்கள். அவர்கள் இஷ்டத்தை அனுஷ்டிக்காமல் நம்மால் இருக்கமுடியாது. இது கிடக்கட்டும். ஒரு சம்பந்தமும் இல்லாதவர்கள், ஒருவர் சம்மதத்தையும் பெருதவர்கள், மலைக்கும் மடுவுக்குமா இருப்பவர்கள், நிமிர்ந்துபார்க்க யோக்யதை இல்லாதவர்கள், முற்றிலும் அசம்பாவிதமாய், ஏதோ கல்யாணம் நிச்சயமாகிவிட்டதுபோல் பேசிக்கொள்ளும்பொழுது, உண்மையிலேயே நோக்கமறிந்த நான், ஏன் கல்யாணம் நிச்சயமானதுபோல் பேசிக்கொள்ளக்கூடாது?”

“யார் அப்படிப் பேசிக்கொள்வது?

“அது ஒரு மனுஷ்யன்?”

“அந்த ஊர்க்கதையெல்லாம் நமக்கெதற்கு?”

“ஊர்க்கதையா?—நம் கதைதான். பேச்சு, நம்ப சம்பந்தமில்லாவிட்டால் நான் பிரஸ்தாபிப்பேனா?”

“எப்படி? நீ சொல்வது குட்டாக விருக்கிறதே!”

“தானே குட்டு வெளியாகிறது”

“நீ சொல்ல ஆரம்பித்ததை நன்றாய்ச் சொல்லேன், என்ன மூடு மந்திரம்?”

“மூடு மந்திரம் ஒன்றுமில்லை. வெட்ட வெளிச்சம்தான். சியாமளாம்பாபுரத்தில் தண்டோராப் போடப்படுகிறது உனக்குத் தெரியாதோ என்னமோ”

“என்ன விஷயம்?

“சேஷு சாஸ்திரி இருந்த நிலைமை யாருக்குத் தெரியாது. இப்போதுதான் என்ன வாழ்கிறது. பலத்த சம்சாரி. என்ன வந்தாலும் போதாது. புராணம், அத்யயனம்: பிரதிக்ரஹம், லௌகிக வியாபகங்கள், மந்திரம் தந்திரம், ஜோஸ்யம், ஜபம். எல்லாவித்திலும் சப்பாதிக்கிறார். இருந்தாலும் பத்து நாள் உட்கார்ந்தால் சாப்பாட்டிற்கு கிடையாது. அவர் பிள்ளை நல்ல கெட்டிக்காரன். பிடித்தாலும் புளியங்கிளையைப் பிடித்தான்”

“அதில் என்ன தப்பு?”

“என்ன தப்பா இந்த மனுஷ்யன்களுக்கெல்லாம் இடத்தைக் கொடுத்தால் தலை கழுத்தில் நிற்காதே—”

“ஏதோ பாவம்”

“நல்ல பாவம்! ஒட்டகைக்காரன் கதை கேட்டிருக்கிறாயோ?”

“என்ன கதை?”

“ஒரு குடிசைக்காரனிடம் ஒட்டகைக்காரன் சொன்னானாம்”

“உம்”

“மழையில் ஒட்டகை நனைகிறது. அதன் தலையைமட்டும் குடிசையில் நீட்டிக்கொள்ள இடம் கொடு என்று. குடிசைக்

காரன் உன்னைப்போல் ஐயோ பாவம் என்று இரங்கி அதற்கு அனுமதித்தானாம். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாய் ஒட்டகையை உள்ளே நுழைத்துக் குடிசைக்காரனை மழையில் நிற்கச் செய்தானாம் ஒட்டகைக்காரன்–"

"அதுபோலே?"

"சேஷு சாஸ்திரிகள் பிள்ளையை நீ ஐயோ பாவம் என்று இரங்கி வீட்டில் வைத்துக்கொண்டு படிக்க வைக்கப் போக, ஊரில் அவர் உன் பெண் காந்திமதியை அவனுக்கு விவாஹம் பண்ணி வைத்து உன் சம்பந்தியாய்விட மனோராஜ்யம் கொண்டிருக்கிறார்—அதுதான் சமாசாரம் எப்படி இருக்கு வழக்கு! இதற்கெல்லாம் நாம் இடம் கொடுக்கலாமா?"

"அவர் சொல்லிக்கொண்டால் என்ன? நாம் கொடுத்தால்தான் என்ன? ஸீதாராமன் தங்க விக்ரஹம்போலிருக்கிறான். குணம் அமிர்தம். படிப்பிலும் ஊக்கமுடையவனாயிருக்கிறான்— படிப்பைவிட உலகமறிந்தவன். நிதானம், அடக்கம், நல்லொழுக்கம் உடையவன். ஏன் காந்திமதியை அவனுக்குக்கொடுத்தாலென்ன? குலம் கோத்திரம் வெகுசிலாக்யமானது. நமக்குத்தான் சேஷு சாஸ்திரிகளையும், வேம்பு அம்மாளையும் தெரியாதா, பிள்ளைக்கு ஒரு உத்யோகத்தைப்பண்ணி வைத்துவிட்டால், தானே முன்னுக்கு வந்துவிடுகிறான். பெண் சௌக்யமாயிருக்க வேண்டியதுதான் முக்கியம். பெரிய இடம் என்று போய் விழுந்து எத்தனையோபேர்மோசம் போகிறார்கள். சொத்தையும்நாசம் செய்கிறார்கள். படாடோபமில்லாமல் கல்யாணத்தைப்பண்ணி முடித்துப் பெண்ணையும், மாப்பிள்ளையையும் எப்போதும்போல் ஆத்தோடு வைத்துக்கொண்டு ஒரு கவலையுமில்லாமலிருக்கலாம். அவருக்குச் சீதாராமன் இல்லாவிட்டால் வீட்டுக்காரியங்களைக் கவனிக்க அவகாசம் கிடையாது. அவன்தான் ஒரு ஜெனரல் செக்ரட்டரி இந்த வீட்டிற்கு—"

"நீ சொல்வதுரொம்ப ஆச்சர்யமாக இருக்கிறதே! இத்தனை விபரீதமாய் நீ பேசுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அப்படி எண்ணியிருந்தால் இந்தப் பிரஸ்தாபத்தையே எடுத்திருக்க மாட்டேனே! ஆனால் பிள்ளை கல்யாணத்தைவிட பெண் கல்யாணந்தான் முதலில் நடக்கும் போலிருக்கிறது."

"அப்படித்தானே நடக்கணும்' பெண்ணை வைத்துக்கொண்டு பிள்ளைக்கு யாராவது செய்வார்களோ!"

"ஓஹோ—சரி. இந்த வார்த்தை காதில் விழவேண்டியதுதான் தாமதம். சேஷுசாஸ்திரியைக் கட்டிப்பிடிக்கமுடியாது ஈரேழு பதினாறுலோகத்தையும் ஜெயித்துவிட்டதாய் மார்தட்டிக்கொள்வார்.' சரிதான் குசேலர் குபேரனாகவில்லையோ — ஆனால் இந்த வீண் ஜம்பக்காரனுக்கு இந்த அதிர்ஷ்டம் ஏதோ கொள்ளை" என்று தான் சொல்லவேண்டும். உங்களை அவ்வளவு குல்லா போட்டிருக்கிறான் அந்தப்பயல் என்று தெரிகிறது. லோகத்தில் நாலுபேர் பார்த்து சிரிக்கும்படி ஒரு காரியத்தைச் செய்யும்படி ஆகிவிட்டது.

"என்னடா சிவராமா நீ பேசறது. லோகத்திலே யார் எதற்காக சிரிக்கிறார்கள்?"

"வயது வந்த பெண் இரண்டு வீட்டிலிருக்கும்பொழுது மூன்றாம் மனுஷ்யனான ஒரு வாலிபனை வீட்டில் வைத்துக்கொள்ளலாமா?" இதைப்பற்றி லோகத்தில் பேசமாட்டார்களா? நாம் அந்தப் பேச்சுக் கிளம்புமுன், முன்ஜாக்கிரதையாய் இருக்கவேண்டாமா. இதை உன் உடன்பிறந்த நான் சொல்லாவிட்டால் வேறு யார் உங்களிடம் அக்கரை எடுத்துக் கொண்டுசொல்லப்போகிறார்கள்? நீ என்னிடம் கோபித்துக்கொண்டாலும்சரி, என்னைத் திட்டினாலும் சரி நான் உனக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்."

"சிவராமா உன் குயுக்திகளுக்குப் பதில் சொல்ல எனக்குச் சாமர்த்தியம் போதாது. புருஷப் பிள்ளைகளுடன் பெண்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கவில்லையா? ஆத்தில் அண்ணன், தம்பிபோல் பழகின நாமறிந்து நல்ல சீலனான ஒரு வாலிபனை நீ பொதுப்பட்ட நியாயங்களை அனுசரித்து தூற்றுவது சரியில்லை. லோகத்தில் இல்லாதது ஒன்றும் நடக்கவில்லை. நம்மைப்பற்றி யாரோ பேசுவார்கள்போல் நீ பயமுறுத்துவதெல்லாம் வீண். இந்தமாதிரி ஹேஷ்யம் வேண்டியவர்கள்போலிருந்து கொண்டு சிலர் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறது வழக்கம், அதுதானே ஒழிய உலகத்துக்கு ஒன்றும் இந்தமாதிரி விஷயத்தில் வயிற்றுவலி கிடையாது"

"அக்கா இன்றையதினம் நீ பேசுவதே விசித்ரமாயிருக்கிறது. நான் உனக்கு வேண்டாதவனாயும், இந்த சேஷு சாஸ்திரி வகையறா உனக்கு வேண்டியவாளாயும் போய்விட்டது காலத்தின் கோளாறே தவிர வேறில்லை. நீ இப்படிப் பேசுகிறவளல்ல. காலத்திற்குத் தக்கபடி புத்தி மாறுகிறது. அந்தப் பிராமணன் ஊரில் பெருமையடித்துக்கொள்வது, ஊரெல்லாம் புரளியாயிருக்கிறது. நீயோ நான்தான் விஷ



மம் செய்வதாய் நினைத்துக்கொள்கிறாய்.' அண்டிப் பிழைக்க வந்தவன் காந்திமதி கையைப் பிடிக்கும்வரை ஆகிவிட்டால் பின்பு என்னைப்போலுள்ளவர்கள் வாசல்படி ஏற யோக்யதையில்லாமல் போய்விடுமே என்று பயந்தான். இந்தப் பிரஸ்தாபங்களைப் பிரபலமாகுமுன் அடக்கிவிட வேண்டும் என்று பரக்கப் பரக்க ஓடிவந்தேன். நீயோ என்மேல் கொடுமை கூறுகிறாய். மறுபடி வற்புறுத்திச் சொல்கிறேன். பெரியவர்களுக்கே புத்தி தடுமாறும்பொழுது சிறிசுகளை நம்பமுடியாது. நிதானம் தவறிவிட்டால் பெருத்த மானக்கேடு. இந்தமாதிரி விஷயங்களில் குருட்டு நம்பிக்கை உதவாது-யாரையும் நம்பிவிடமுடியாது. எவ்வளவு நெறியுள்ளவனும் தவறிவிட்ட சரித்திரங்களை நாம் கேட்டிருக்கிறோம். இந்தக்காலத்தில் அடிக்கடி காதில் விழும் சமாசாரம் இதுதான். திடுக்கிடும் சம்பந்தங்களும் ரிஜிஸ்டர் விவாஹங்களும் சகஜமாகி வருகின்றன. பெற்றோர்கள் திகைக்கும்படிக்கும் விஷத்தை உண்டு வெளிக்கு முக விகாஸத்தைப் பிரகடனம் பண்ணும்படிக்கும் காரியங்கள் ஹத்துமீறி நடந்துவிடுகின்றன. ஆகையால் காலத்தில் விவாஹம் செய்வதுதான் குடும்பத்தின் கண்யத்தையும் பரிசுத்தத்தையும் காப்பாற்றும் வழி. என் சுய காரியத்திற்காக நான் பேசவில்லை. நீ இஷ்டப்படாவிட்டால் செல்லத்திற்கு வேறு இடம் பார்த்து விடுகிறேன். காந்திமதிக்கும் நான் வரன் பார்த்துத் தருகிறேன். வீணாய்க் கீழே விழுந்துவிட்டுக் கன்னத்தில் மண் ஒட்டவில்லை என்று பிரதாபம் பேசிக்கொள்ள வேண்டாம். நமக்கு எவ்வளவோ உயர்வான சம்பந்தங்கள் கிடைக்கக்கூடிய போது பள்ளத்தில் குதித்தால் தடுமாறி விழுந்ததாய்த்தான் லோகத்தில் நினைப்பார்களே ஒழிய நிதானமாய் இறங்கியதாய் ஒருவரும் நம்ப மாட்டார்கள். இந்தமாதிரி அவக்கேடான சம்பந்தங்களெல்லாம் தீராத பக்ஷத்தில்தான் நடக்கின்றன என்பது யாவரும் அறிந்ததே''

"என்னமோ உனக்குத் தெரிந்ததை நீ சொல்கிறாய்'' என்றாள் சலிப்புடன் சங்கரி—அந்த சமயம் ராமனாதனும், ஸீதாராமனும், பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தார்கள். சிவராமன் முன் வாசலுக்குப் போய் ஹாலில் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

(தொடரும்)

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: ''சுதேசமித்திரன்'' ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

" சுதேசமித்திரன் '' வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.



["அச்சமில்லை அச்சமில்லை" என்ற பண்டாரப்பாட்டைப் போல.]

★

1.

கட்டுப்பாட்டைச் சுட்டிக் காட்டி
சட்டமெல்லாம் பேசினர்
கட்டும் துணிக்குக் கூடுவோரைக்
கண்டவாறு ஏசினர்.

2.

முரட்டு லாபம் அடிக்க எண்ணி
மடக்கிப் போட்ட ஜவுளியை
இருட்டு வெளியில் திருட்டுத்தனமாய்
திரட்டிச் சுருட்டி விற்றனர்.

3.

கூழைக் காய்ச்சிக் கரைச்சுக்குடிக்கும்
ஏழைமக்கள் என் செய்வர்?
பாழும் 'ரேசன்' கார்டை நீட்டி
பல்லை இளிச்சுக் காட்டினர்!

4.

ஆலைக்காரர், நாலுக்காரர்
செய்யும் வேலைத்தனங் கண்டு
வாலை ஒட்ட அறுக்க எண்ணி
வழிகள் செய்ய முன் வந்தார்.

5.

கட்டுப்பாட்டைத் தளர்த்தி விட்டு
கண்காணித்து வந்தனர்
சுட்டெழுந்த வாணம் போலே
துள்ளி விலையைக் கூட்டினர்.

6.

தட்டிக் கேட்க ஆளில்லையென
கொட்டங்கள் மிக அடிக்கறார்
விட்டு வைத்தால் விளையும் கேட்டை
திட்டமாக உணர்வரோ!

7.

ஏகத்தாறு எங்கும் ஜவுளி
வந்து குவிந்து போச்சுது
இருந்தும் ஜனங்கள் விலைக்குப் பயந்து
ஏங்கித் தவிக்கலாச்சுது!

8.

பருத்தி தலையில் பழியைத் தள்ளி
உயர்த்திச் செலவைக் காட்டியே
சுருக்க வழியில் புகுந்து பணத்தை
சூறை கொள்ள பார்க்கிறார்.



மன்னனை ஆண்ட மங்கை

இதுவரையில்...

[எட்டாம் நூற்றுண்டிலே ராஜ ஸிம்ம பாண்டியன் ஒரு சக்கிரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கிரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய்ச் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனுபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை: ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறுன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபைகூட்டி மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிருர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணு சித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிருர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

11

திருட்டும் புரட்டும்

விஷ்ணுசித்தரின் பஜனைக் கூடம் அவருடைய இல்லத்தை ஒட்டியிருந்தது. அதற்கு அப்பால் அவருடைய ஆனந்தப் பூங்காவனம். இரவில் சந்திரிகையிருந்தபோதிலும், பஜனைக் கூடத்தை நோக்கியிருந்த பூங்காவனப் பகுதியிலும், அங்கிருந்து பஜனைக் கூடத்திற்கு வரும் வழியிலும் மரங்கள் அடர்ந்திருந்ததால், அந்தப் பிரதேசம் இருண்டதாகவேயிருந்தது.

குறித்த பூங்கா்வனப்பகுதியில் அந்நள்ளிரவிலே யாரோ ஒருவர் வந்து சேர்ந்தார். அவர் சிறிதுநேரம் ஆலோசனையில் ஆழ்ந்தவராய் ஒரு மரத்தருகே நின்றுர். 'அவர்கள் ஏன் இன்னும் வரவில்லை? எப்படியாவது அவரை அந்த அம்மாள் தேற்றிக்கொண்டு வந்துவிடுவாள். அது நிச்சயம். என்றுலும், அந்த மனிதருக்குத்தான் ஏன் இந்தப்பயம், ஏன் இந்தக் கோழைத்தனம்?.........கோழைத்தனமா? கெட்ட காரியத்திற்கு அஞ்சுவதும் கோழைத்தனமாகுமா? அஞ்சவேண்டியதற்கு அஞ்சுவதுதானே அறிவுடைமை?......ஆனுல் இக்காரியத்தில் துணிந்து இறங்குவானேன்? இறங்கிய பிறகு, "கேட்டிலும் துணிந்து நில்" என்ற முறைதானே வெற்றிதரக்கூடியது? இந்த விஷயத்தில் அந்த ஸ்திரீக்கு உள்ள தைரியமும் இல்லை இந்த ஆண்பிள்ளைக்கு!' என்றெல்லாம் அங்கே மரத்தருகில் நின்றுகொண்டிருந்தவரின் உள்ளத்தில் எண்ணங்கள் ஓடின.

திடீரென்று வேறு சில எண்ணங்களும் குறுக்கே பாய்ந்தன. இந்தக் காரியம் சரியான காரியம் தானு? "இது நியாயமா, தருமமா?" என்று இனி ஆலோசிக்கத் தேவையில்லை. எனினும் இது ஒரு மூடத்தனமான செய்கை. கேவலம் ஒரு கிருஷ்ண படம் அதிர்ஷ்டத்திற்கும் வெற்றிக்கும் காரணமாக இருக்கிறதென்றுல், அதை எந்த அறிவாளி தான் நம்பமுடியும்? இந்த மூட பக்தர்களே நம்ப முடியும். ஞானப்பிரானின் பயமும் மூடபக்தியால் ஏற்பட்டதுதான்; "தவறுன காரியம் செய்கிறேமே" என்ற தர்ம உணர்ச்சியால் ஏற்பட்டதில்லையே!' என்று எண்ணமிட்டபின், வாய்விட்டு 'என்ன பைத்தியக்காரத்தனம்! இதில் நாமும் கலந்து

கொள்ள நேர்ந்ததே' என்று முணுமுணுத்தார் ஆனந்த தீர்த்தர்.

ஆம், இவர் பௌத்த பிட்சுதான். இவர் முணுமுணுத்த அதே சமயத்தில், 'இந்தப் பைத்திய வேலையில் நானும் கலந்துகொள்ள நேர்ந்ததே!' என்று நடுங்கிய குரலொன்று சொல்லிற்று. அது ஞானப்பிரானின் குரல்தான். 'கிருஷ்ண படத்தைத் திருடுவது-அதிலும் அந்தக் "காளிய நடனப்" படத்தைத் திருடுவது தவறான காரியம்; என்னைப்போன்ற புத்திசாலி செய்யத்தகாது' என்று எண்ணியவராய் ஞானப்பிரான், பிட்சு பிரிந்து போன பின்பும் தம் மனைவியுடன் வாதஞ் செய்து பார்த்தார். சாஸ்திரம், யுக்தி, அனுபவம் என்ற மூன்று ஆயுதங்களையும் கொண்டு வாதித்துப் பார்த்தார். வழக்கம்போல், வாதங்களில் பண்டிதர்களை வெல்லும் அந்தத் திறமை மனைவியின் வார்த்தைகளுக்குமுன் நிற்கமுடியாமல் தோற்றுப் போயிற்று. வாதம் பிடிவாதத்திற்கு முன் பணிந்து போயிற்று. பௌத்த பிட்சு எதிர் பார்த்தபடியே ஹரிலட்சுமி ஞானப்பிரானை அங்கே கொண்டு வந்து விட்டாள்.

மூவரும் மெள்ள மரங்களின் நிழலிலே சென்று பஜனைக் கூடத்தின் பின்புறத்தை யடைந்தார்கள். ஞானப் பிரான் மற்ற இருவர் உதவியாலும் பஜனைக்கூடத்துக் கூரைமீது ஏறிச் சிலதென்னக் கீற்றுகளைப் பிரித்துக் கொண்டுகூடத்துக்குள் இறங்கிவிட்டார். வாடா விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

விரஜை (விஷ்ணுசித்தரின் தேவி) இல்லத்தில் உறங்கிக்கொண்டிருந்தாள். அவளுக்குத் துணையாகத் திண்ணையில் கோபிகை மதுரைவல்லி படுத்திருந்தாள். அவள் விரஜைக்குப் பணி செய்துகொண்டிருந்தாள்.

விரஜை உறங்கிவிட்டாள். மதுரைவல்லிக்கோ உறக்கம் பிடிக்கவில்லை. அவள் வெளியே வந்து யாரையோ எதிர்பார்த்ததுபோல் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தாள். யாரை எதிர்பார்த்தாளோ அவளும் வந்து சேர்ந்தாள். ஆம், அவள்தான் மதுரவள்ளி. இருவரும் பேசிக்கொண்டே சிறிது தூரம் போனார்கள்.

அப்போது ஞானப்பிரான் பஜனைக் கூடத்திற்குள்ளே இறங்கிவிட்டார். கொல்லைப் புறத்தில் ஹரிலட்சுமி காத்திருந்தாள். பிட்சுவோ, 'யாரும் வாசற்பக்கமாய் வராமலிருக்க வேணுமே' என்று பஜனைக்கூடத்திற்கு முன்புறத்தை நோக்கியவண்ணம் ஒரு மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார். அப்போது மதுரைவல்லியும், மதுரவள்ளியும் சிறிது தூரத்தில் நடந்து போவதைப் பார்த்துவிட்டார். 'அவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்களா?' என்று திகைத்தார். 'ஒருவேளை அரசனுடைய ஒற்றர்களும் இவ்வூரில் வந்திருக்கக்கூடுமோ?.... அந்த நரசிம்மன்' என்று திகிலடைந்தார். எனினும் தைரியப்படுத்திக் கொண்டு, 'மனோபாவம் தன் இஷ்டப்படியெல்லாம் பயமுறுத்துவதற்கு இடங்கொடுக்கலாகாது' என்று தமக்குள்தாமே சொல்லிக் கொண்டார்.

பஜனைக் கூடம் ஒரு சித்திர

சாலே போலவும் தோற்றமளித்தது. வாடா விளக்கின் ஒளியிலே சித்திரங்களெல்லாம் உயிர்பெற்றிருப்பன போலத் தோன்றின. கூடம் விஸ்தாரமாக இருந்தது. சித்திரங்களெல்லாம் விஷ்ணுசித்தரின் சீடர்களில் ஒருவனாக இருந்த ஓவிய மணியால் தீட்டப்பெற்றவை. விஷ்ணு சித்தரின் பக்தி உள்ளம் எந்தெந்த இதிகாசபுராண கதைகளில் விசேஷமாய்ச் சஞ்சரித்ததோ, அக்கதைகளின் முக்கியமான காட்சிகளெல்லாம் இங்கே சித்திரிக்கப் பெற்றிருந்தன. அந்தச் சித்திரங்களுக்கு

என்று இப்போது எச்சரிக்கை செய்வது போலத் தோன்றின.

ராமபிரானது வீர சௌந்தரியக்காட்சிகளைப் பார்க்கத் தைரியமில்லாமல், வேறு புறமாகத் திரும்பின திருட்டுக் கண்கள் அந்தப் பக்கத்தில் அவதாரங்களின் காட்சிகள் சித்திரிக்கப் பெற்றிருந்தன. மீனாகவும், ஆமையாகவும், பன்றியாகவும் இறைவன் தாழ்ந்து பிறந்த கருணைமயமான லீலைகள் ஞானபிரானுள்ளத்தில் பக்தியுணர்ச்சியைப் பிறப்பித்தன. ஆனால் அடுத்த அவதாரக் காட்சியிலே உக்கிர நரசிங்கம் அசுர

இடையேயிருந்து விஷ்ணு சித்தர் பஜனை செய்யும்போது, அவர் பேசும் உண்மைகளுக்கு அத்தனை சித்திரங்களும் 'நான் சாட்சி, நான் சாட்சி!' என்று போட்டியிட்டு முற்படுவது போலத் தோன்றும். அவருடைய விரிந்த அழகிய உள்ளத்திற்கு ஓர் அறிகுறியாக இருந்தது சித்திரசாலை.

அந்தச் சித்திரசாலையின் ஒரு புறம் ராமாயணச் சித்திரங்கள், தாடகைவதம், வில்முறித்தல், பரசுராம கர்வபங்கம், நாடு துறத்தல், குகனோடு தோழமை, பரதனுக்குப் பாதுகையளித்தல், கரன்வதம், மாயமான் வேட்டை, தேவியைப் பிரிந்து புலம்பல், மரா மரம் எய்தல், ஹனுமான் சீதைக்குக் கணையாழி அளித்தல், ராவண வதம், வீபீஷணபட்டாபிஷேகம் முதலான காட்சிகள். அந்தக்காட்சிகள் ஞானப்பிரானை நோக்கி, 'துஷ்டத்தனம் செய்யாதே. துஷ்டநிக்கிரகம் பகவானுடைய தொழில்

இரணியனை வதைத்த கோர பயங்கரத்தைக் கண்டதும், ஞானப்பிரான் நடுங்கிப்போனார். இவர் பளிச்சென்று அப்படத்திலிருந்து தம் திருட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டார். இவர் திரும்பிப்பார்த்த பக்கத்திலே கஜேந்திர மோட்சம், ஆலிலைமேல் பாலன் முதலான காட்சிகள் காணப்பட்டன.

எனினும் பஜனைக்கூடத்தின் பெரும் பகுதியிலும் கிருஷ்ண படங்களே வைக்கப்பட்டிருந்தன. பஜனைக்கூடத்தைப் பகலில் ஞானப்பிரான் பார்த்திருந்தவர்தான். எனினும் அந்த இரவில் பளிச்சென்று 'காளிய நடனப்' படத்தைக் கண்டுகொள்ளவில்லை. அது இருந்த இடம் தெரியும்; எனினும் திகைத்தார், தேடினர்.

கண்ணன் பிறந்த காட்சிகளைப் பார்த்துச் சிறிது ஆறுதல் அடைந்தார், ஆனால் 'பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி'யாகிய பூதனை–வதத்

தைக் கண்டதும் பயந்து போனார். 'ஐயோ, ஆஷாடபூதிகளுக்கு ஆபத்து! என்னைப்போன்ற திருடர்களுக்கோ.........' என்று பதறினார்.

கண்ணன் வெண்ணெய் திருடிய காட்சிகளைக் கண்டு, 'பகவானே! மன்னிக்கவேணும் இந்தத் திருட்டையும்!' என்று பிரார்த்தித்துக் கொண்டார். கண்ணனை உரலோடு கட்டியிருந்த படத்தைக் கண்டதும், தம்மையும் அந்த இரவில் யாராவது பிடித்துக் கட்டிப்போட்டு விடுவார்களோ என்ற பயம் வந்துவிட்டது.

அந்தப் பயத்தை உதறிவிட்டு, கண்ணன் கோபிகைகளுடன் கூத்தாடிய காட்சிகளையும், மலையைக் கொடையாகப் பிடித்தது போன்ற காட்சிகளையும் பார்த்து, 'உன் படத்தைத் திருடுவதற்கு நீயே உதவி செய்யவேணும்' என்று ஒரு வினோதப் பிரார்த்தனை செய்து கொண்டார். எனினும் கம்ஸ–நரகாசுர பாணாசுர விஜயக்காட்சிகள் மீண்டும் பயமுறுத்தின.

தூதுபோன எளிமையும், குதிரையோட்டிய வைபவமும், ருக்மணி கல்யாணமும் நப்பின்னை திருமணமும், ராதையின் காதலும் வேறுகாட்சிகளின் அழகும் இனிமையும் எளிமையும் பெருமையும் பார்த்துக்கொண்டே வரும்போது, காளியநாகத்தின் கொழுப்படக்கிப் படத்தின் மீது நடம்புரியும் அந்தப் படத்தையும் பார்த்து விட்டார்.

முன்னமே பார்த்திருந்த படம்தான். 'ஆச்சரியமான உயிர்ச்சித்திரம் என்று வியந்திருக்கிறார், மயங்கியிருக்கிறார். ஆனால் இப்போது பயந்தே போனார்.

அந்த இரவில், அந்த வாடா விளக்கின் ஒளியில், அந்தக் காளிய நாகம் அப்படியே உயிர் பெற்றுச் சீறுவதுபோலத் தோன்றியது. 'உன் படத்தின்மேல் கள்ளக் கிருஷ்ணன் துள்ளித் துள்ளி மிதித்து மிதித்துக் கூத்தாடியும் உன் கொழுப்பு இன்னும் அடங்கவில்லையா?' என்று முணு முணுத்தார்.

'பயப்படக்கூடாது. படம்தானே எப்படியாவது எடுத்துக்கொண்டு போக வேண்டியது தான். அவர்கள் காத்திருக்கிறார்களே; எவ்வளவு நேரம் காக்க வைப்பது?' என்ற எண்ணத்துடன்



படத்தின்மேல் கை வைத்தார். படம்தானு அது?

வாடா விளக்கு மங்கி எரிந்தது. அல்லித் தண்டுபோல் ஒரு குளிர்ச்சி, 'பாம்புடா!' என்று அலறினர். உடம்பில் இருக்கும் ஜில்லென்று குளிர்ந்து உறைந்துவிட்டதுபோலத் தோன்றியது. கூரையில் தொத்தி வெளியே சாடினர். அவ்வளவு சீக்கிரமாக எப்படித்தான் வெளிப்பட்டாரோ? பயம்தான் எத்தகைய அதிசயங்களைச் செய்துவிட்டது!

அவர் வந்து விழுந்த வேகமும், மாதிரியும் கண்டு ஹரிலட்சுமியும் பயந்து போனுள். பிறகு தைரியப்படுத்திக்கொண்டு அப்படியே அவரைக் கையைப் பிடித்து இழுத்துப் பூங்காவனப் பக்கமாய்ப் போக முயன்ருள். இதற்குள், சத்தம் கேட்டுப பிட்சுவும் வந்துவிட்டார்.

ஞானப்பிரானே 'பாம்பு, பாம்பு' என்று புலம்பியவண்ணம் பிடியைத் திமிறிக்கொண்டு ஓட ஆரம்பித்தார். 'பஜனைக்கூடத்திற்குள் ஏதாவது பாம்புதான் புகுந்துவிட்டதா, என்ன?' என்று ஹரிலட்சுமி கேட்டாள். பௌத்தபிட்சுவோ, 'பாம்பாயிராது; கயிற்றைக் கண்டு பாம்பென்று பயந்திருப்பார். கயிற்றைப் பாம்பென்று மயங்கும் மயக்கம்தானே. இந்த மாய வாழ்க்கையை மெய்யென்று நம்புவதும்!' என்று சமாதானம் சொன்னர்.

அதற்குள் ஞானப்பிரான் ஓடிப் போய்விட்டார். இருவரும் அவரைத் தொடர்ந்தார்கள். இவர்கள் தொடர்ந்து வருவது தெரிந்ததும். அவருடைய ஓட்டமும் அதிகரித்தது. இவர்கள் தொடர்ந்து வருவது காளியன் என்ற அந்தப் பாம்பே அப்படித் துரத்திக்கொண்டு வருவது போலத் தோன்றியது. அதிவிரைவில் கூரையிலே தொத்திக் கீழே குதிக்க உதவிய அந்தப் பயம், இப்போது இந்த இருவருக்கும் அகப்படாமல் தப்பி வெகு தூரம் ஓடிப் போகவும் துணைபுரிந்தது.

ஹரிலட்சுமி விரைவில் களைத்துப் போய் நின்றுவிட்டாள். பௌத்தபிட்சு 'புத்தம் சரணம் கச்சாமி' என்று ஜபம் செய்துகொண்டே துரத்திப்பார்த்தார். ஞானப்பிரானின் வேகமோ மேலும் மேலும் அதிகரித்தது. அவரா போனர்? பயவெறியல்லவா பிடர் பிடித்துத் தள்ளிக்கொண்டு போயிற்று?

'தர்மம் சரணம் கச்சாமி' என்று சொல்லிக்கொண்டே ஆனந்த தீர்த்தர் வழியில் சிறிது உட்கார்ந்து இளைப்பாறினர். மறுபடியும் துரத்திப்பார்த்தார். வயது முதிர்ந்தவரல்லவா? மறுபடியும் கொஞ்சம் இளைப்பாறினர்.

புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி

என்று ஜபித்து, 'ஆஹா, தர்ம நிழலும், புத்தர் பெருமானின் சரண நிழலும் எவ்வளவு ஆறுதல் அளிக்கின்றன!' என்று சொல்லிக்கொண்டே, மறுபடியும் ஓடிப்பார்த்தார்.

வழியில் படுத்திருந்த ஆடொன்று கால் தடுக்கப் பொத்தென்று விழுந்தார். அந்த ஆடு பயந்து ஓடிற்று. 'அந்தோ! இந்த உயிர்ப் பிராணிக்கு ஹிம்ஸை புரிந்தேனே! சங்கம் சரணம் கச்சாமி' என்று சொல்லிக்கொண்டே, பிட்சு கீழே எழுந்து உட்கார்ந்தவண்ணம் தம் கால்களைத் தடவி விட்டுக்கொண்டார்.

'இந்தப் பைத்தியக்கார வேலையில் நாம் ஏன் தலையிட்டோம்? ஞானப்பிரானுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது போலத் தோன்றுகிறது. பைத்தியக்காரனைத் துரத்திப்பிடிப்பதில் என்ன லாபம்?' என்று தமக்குள் தாமே சொல்லிக்கொண்டார். 'இந்தப்பைத்தியக்கார வேட்டையில், இந்த ஓட்டத்தில், எத்தனை சிற்றுயிர்கள் வதமாயிருக்கக்கூடும்? அஹிம்ஸா தர்மத்தை இப்படியும் கொலை செய்யலாமா?' என்று எண்ணமிட்டார். இனி இந்த இரவில் ஓடி அஹிம்ஸா தர்மத்தை இப்படி வதஞ்செய்ய மாட்டேன்' என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே மெள்ள எழுந்தார்.

எழுந்து நின்று, ஊர்ச் சத்திரத்திலே போய்ப் படுத்துக்கொள்வோம் என்று சத்திரத்தை நோக்கிப் புறப்பட்டார் பௌத்தபிட்சு. ஞானப்பிரான் வீட்டுக்கு அருகே வந்ததும், அந்த வழியில் மதுரைவல்லியும் மதுரவள்ளியும் நின்றுகொண்டிருப்பதையும், மதுரைவல்லி மதுரவள்ளிக்குத் தம்மைச் சுட்டிக்காட்டுவதையும் பார்த்துத் திடுக்கிட்டார். திடுக்கிட்டுப் பளிச்சென்று ஞானப்பிரானின் வீட்டுத் தூண்ணைப் பக்கமாகப் போய்ப் பதுங்கிக் கொண்டார். தம்மை வேறு யாரோ ஒருவன் தொடர்ந்து வந்தான் என்பதையும் இவர் அறிந்துகொண்டிருந்தால், இன்னும் அதிகமாய்ப் பயந்திருப்பார்.

ஆனல் அந்த ஆசாமியை மேல் மாடத்திலிருந்து ஹரிலட்சுமி பார்த்து விட்டாள். அவள் அவனைத் திருக்கோஷ்டியூரில் ஏற்கெனவே பார்த்திருக்கிருள். அந்த நினைவு வந்ததும், 'அவன் ஒற்றனுகத்தான் இருக்க வேணும்' என்று ஊகித்துக் கொண்டாள். தெற்கே சேர அரசன் கிளப்பிய கலகத்தைப் பாண்டியன் அடக்கியபின், இரண்டு அரசர்களுக்குமிடையே சமாதானம் ஏற்பட்டது தேசப் பிரசித்தியான செய்தி. எனினும் இரண்டு அரசர்களுடைய

ஒற்றர்களும் ஒரு கட்சியினரை மற்றக் கட்சியினர் அறிந்து கொள்வதற்காக, மாறுவேடங்களில் பல ஊர்களிலும் சஞ்சரித்து வருவதாக ஹரிலட்சுமி கேள்விப்பட்டிருந்தாள்.

பௌத்த பிட்சுவைக் குறித்து ஹரிலட்சுமிக்கும் சந்தேகம் உண்டு. 'அவர் மதவாதிமட்டுமல்ல, அஹிம்ஸா தர்மவாதி மட்டுமல்ல!' என்று ஒரு சமயம் ஞானப்பிரான் அவளிடம் சொன்னதுண்டு. 'அப்படியானல் அவர் யார்?' என்று ஹரிலட்சுமி கேட்டாள். 'அவர் அஹிம்ஸாவாதியாக இருக்கலாம்; ஆனல் எதார்த்தவாதியில்லை!' என்று ஞானப்பிரான் பதில் சொன்னர். 'அப்படியானல் அவள் ராஜத்துரோகியா?' என்று ஹரிலட்சுமி கேட்க, 'பொதுஜனத்துரோகியும்கூட!' என்று பதில் வந்தது.

இப்போது, தான் ஒற்றனென்று சந்தேகித்த ஆசாமி தன் வீட்டுக்கருகே காணப்பட்டதும், இரவில் வேகமாய் ஓடிக்கொண்டிருந்த தன் கணவனைத்தான் ஒருவேளை சந்தேகித்து ஒற்றன் கவனித்து வருகிருனே என்று எண்ணினுள். எதற்கும் கதவைத் திறந்து பார்க்கலாமென்று நினைத்தாள்; ஆனல் ஒற்றன் பௌத்தபிட்சுவை உள்ளபடியே தெரிந்துகொண்டுதொடர்ந்து வந்திருந்தால், என்ன செய்வது? கதவைத் திறந்து அவருக்கு வீட்டில் இப்போது இடங்கொடுக்கலாமா? அதை ஒற்றன் பார்த்து விட்டால், அவரை ராஜத்துரோகியென்று அவன் சான்றுகளுடன் கண்டுபிடித்தும் இருந்தால், ராஜத்துரோகத்திற்கு உதவியதாகத் தங்கள்மீதும் குற்றம் சுமத்தப்படலாமல்லவா?

எனினும் ஒருவேளை தன் கணவரே ஓடி வந்திருந்து, ஒற்றனுக்கு அஞ்சிக் கதவைத் தட்டாமல் பதுங்கிக்கொண்டு இருக்கவும் கூடும் என்று எண்ணினுள். ஆனல் ஒற்றன் தொடர்ந்து தன் வீட்டை நோக்கி வந்துவிடாமல் அப்பால் போய் விட்டான். அந்த நிலவு-வெளிச்சத்திலே அவன் இரண்டு ஸ்திரீகளுடன் பேசிக்கொண்டு போவதையும் ஹரிலட்சுமி கவனித்தாள்.

ஏன் அவன் இப்போது அவர்களுக்குமுன் அவ்வளவு வணக்க ஒடுக்கத்துடன் நின்று பேசுகிருன்? அந்த ஸ்திரீகளின் முகங்களையும் அந் நிலவிலே கவனித்துப் பார்க்க முடிந்தது. என்ன அதிசயம்! ஒருத்தி நமக்குக் குறி சொன்ன குறத்தியல்லவா? குறத்திக்கு இவ்வளவு மரியாதையா? இன்றிரவு நடந்ததெல்லாம் அதிசயமாகத்தான் இருக்கிறது!

இப்படியெல்லாம் எண்ணமிட்டவண்ணம் ஹரிலட்சுமி மெள்ள இறங்கி வந்து ஜாக்கிரதையாகக் கதவைத் திறந்து பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. திண்ணை மறைவில் பதுங்கிக்கொண்டிருந்த பிட்சுவை அவள் கவனிக்கவில்லை. வாசலில் வந்து நின்று மாடியிலிருந்து பார்த்த மூன்று ஆசாமிகளும் அங்கேதான் நின்றுகொண்டிருக்கிருர்களா, அல்லது அப்பால் போய்விட்டார்களா என்று தெரிந்துகொள்ள

இந்தியாவின் கவர்னர் ஜனரல் பதவியை ராஜாஜியிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றவாரம் லண்டன் புறப்பட்டுச் சென்ற மவுண்ட்பாட்டன் பிரபுவுக்கு டில்லி ரோஷ்னரா கிளப்பின் ஆதரவில் ஓர் பிரிவுபசாரம் நடந்தபோது எடுத்த படம். சங்கக் காரியதரிசி ஸ்ரீ. பிரஸாதுடன் மவுண்ட்பாட்டன் கை குலுக்குகிறார்.

விரும்பினாள். ஆனால் அதற்குள் அவர்கள் போய்விட்டார்கள். ஹரிலட்சுமியும் கதவைத் தாளிட்டுக்கொண்டு மாடிக்குப் போய்விட்டாள். மாடி முன்புற வெளியில் நின்று பார்த்தாள். மூவரும் விஷ்ணுசித்தரின் மாளிகையை நோக்கிப்போவது தெரிந்தது.

ஹரிலட்சுமிக்குப் பயம் அதிகரித்தது. தங்கள் திருட்டு—முயற்சி வெளிப்பட்டுவிடுமோ என்று அஞ்சினாள். தன் கணவரைப் பிடித்துப் பயமுறுத்தி விடுவார்களோ என்று நடுங்கினாள். அந்தப் பயப்பிராந்தரும் உண்மையைக் கக்கி விடுவாரோ என்று நடு நடுங்கினாள். கணவர் வீட்டுக்கு வந்துவிட்டாலும் உள்ளத்தை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள். அந்த நிலையில் அன்றிரவு சிவராத்திரி தான் ஹரிலட்சுமிக்கு!

ஓர் ஆசாமி வந்து திண்ணைப்பக்கமெல்லாம் தேடிப்பார்த்துவிட்டுக் கொல்லைப்புறமும் போய்த்தேடினான். உறக்கமில்லாத ஹரிலட்சுமி அவனைப் பார்த்துவிட்டாள். தான் சந்தேகித்த அந்த ஒற்றன்தான் அவன். 'யாரைத் தேடுகிறாய் அப்பா! இந்த இரவிலே?' என்று கேட்டுவிட்டாள் மாடத்தின் பின்புறத்தில் நின்றபடியே, கொல்லைப்புறத்தில் இருந்தவனை நோக்கி அவள் பதில் சொல்லத் தயங்கினாள்.

'என்ன அப்பா, உன்னைத்தானே கேட்கிறேன்? நீ திருடனுமில்லை, ராஜசேவகன் என்பது எனக்குத் தெரியும். ஒரு ஸ்திரீ தனியாக இருக்கும் வீட்டுக் கொல்லையில் இப்படி வந்து பார்ப்பது நியாயமா?' என்று மறுபடியும் கேட்டாள். 'மன்னிக்க வேணும் அம்மணி! பசுவைத் தேடிக்கொண்டு வந்தேன்!' என்று சொல்லிக்கொண்டே அவன் நடையைக் கட்டினான்.

'பசுவா? நல்லது' என்றாள் அவள்.

'புலி' என்றான் அவன்.

'என்ன? நீ பைத்தியமா, நான் பைத்தியமா?'

'பசுத்தோல் போர்த்தபுலி' என்று சொல்லிக்கொண்டே அவன் விரைந்து போய்விட்டான்.

* * * * * *

ஹரிலட்சுமிக்குத் தெரியாமேலே அந்தப் 'பசுத்தோல் போர்த்த புலி' அந்த வீட்டில்தான் இருந்தது. வாசலிலும் இல்லை, கொல்லையிலும் இல்லை, வீட்டுக்குள்ளே இருந்தது ஆம். ஹரிலட்சுமி வீட்டு வாசலில் நின்று பார்த்துக்கொண்டிருந்தபோது பிட்சு மெள்ள வீட்டுக்குள புகுந்து, குறமதுரம் மறைந்திருந்த அதே அறையில் பதுங்கிக்கிடந்தார்.

தன்னைத் தொடர்ந்தவன் யார் என்று அவருக்குத் தெரியும்; நன்றாய்த்தெரியும். நரசிம்மன் என்றால் சிம்ம சொப்பனம் அவருக்கு. குற்றமுள்ள நெஞ்சு குறு குறுத்தது, புரட்டெல்லாம் வெளிப்படுங்காலம் நெருங்கி விட்டதோ என்று!

(தொடரும்)

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள்

ஸாஹித்யங்கள்

'ராஜ்ய சேவாநிரத' செம்மங்குடி

ஸ்ரீநிவாஸ ஐயர் ஸ்வரப்படுத்தியது

பல்லவி

போகீந்த்ரசாயினம் புரகுசலதாயினம்
4 3 3 3

புருஷம் சாச்வதம் கலயே (போகீந்த்ர)
4 3

அனுபல்லவி

வாகீசகௌரீச வாஸவாத்யமரபரி—
3 3 3

வாராபி வந்தித பதம் பத்மநாபம் (போகீந்த்ர)
4 3 3 3 4 — 4 3

சரணங்கள்

1. க்ஷீரவாராந்நிதி ச்வேதாந்தரீப வசித்ரமணி ஸௌதாஸ்திதம்
4 4 4 2

நாரதாத்யகிலமுனி திவ்யபார்ஷத விஹக நாயக ஸதாராதி தம்
3 3 2 3 3 3 3 4

ஸுரபாஸுரஸுதர்சன நந்தகப்ரமுக சோபனயுத ஸேவிதம்
4 3 2 4

ஸ்ரீரஸாகர ஸரோஜாம்நதித பாத வந்தாருஜனபரேணுத்யதம் பத்மநாபம் (போகீ)
3 3 3 4 3 3 4 — 4 3

2. பரம பக்தோத்தம திவாகர யதீந்த்ரக்ருததரு புண்யவஸுதாக தம்
4 3 3 3 4 3

ஸுருசிராத் புதபால வேஷ ஸாக்ஷாத்கார பரிதோஷ சிரலாளிதம்
3 4 3

பரிபூஜனர்த்தஸாளக் ராமஹர்ணுத்தரயோகி கரவாரிதம்
2 3 3

த்வரிதானுயாதயதிகருணுதலரனந்தபுர பாதபாத்யாஸிதம் பத்மனபம் (போகீ
3 4 3 4 — 4 3

3. கலிதநுதிஸன்யாஸிப ஜனனுகுண விஹிதஸுலளிதாகார மஹிதம்
4 3

கலுஷஹரபரிஸரோஜ்வல பத்மதீர்த்தாதி கண்டிதா சேஷதுரிதம்
3 2 3 2 3 3

கலசோத்பவாங்கித மஹேந்த்ர த்ரிகூட வரமலயாசலேந்த்ரா வினுதம்
3 4 3

கலதமன வஞ்சிமார்த்தாண்ட வர்மாகலித காஞ்சனவிமானலஸிதம் பத்மனபம் (போகீ)
2 3 3 3 4 — 4 3

4. அருணப மணிமகுட மகரகுண்டல சாரஹார கௌஸ்துப பூஷிதம்
4 3 4 4

பரிவீதபீதாம்பராகலித காஞ்சிகாவரவன்யமாலாஞ்சிதம்
3

நிரவத்யவஞ்சீசக்ருதலக்ஷதீபாதி நித்யோத்ஸவானந்திதம்
3 3 3 3

ஸரஸீருஹோதர பலாசாயதாக்ஷிபுட பரிபூர்ண கருணும்ருதம் பத்மனபம் (போகீ)
3 3 4 — 4 3

பல்லவி

போகீந்த்ர சாயினம் 4 3	—பாம்பணையில் பள்ளிகொண்டவனும்
புருகுஸலதாயி நம் 3	—மிகவும் நன்மைகளைச்செய்பவனும்
புருஷம்	—உத்தம புருஷனுமான பதுமநாபப்பெருமானை
சாச்வதம்	—நித்தியம்
கலயே	—(நான்) வணங்குகின்றேன்

அனுபல்லவி

வாகீச, கௌரீச 3 3	—பிரமன், சிவன்
வாஸவாத்ய மரபரிவார 3	—தேவேந்திரன் முதலிய தேவர்களால்
அபிவந்திதபதம் 4 3 3	—வணங்கப்பட்ட பாதங்களையுடைய
பத்ம நாபம் 3 4	—ஸ்ரீ பதும நாபப்பெருமானை (நான் வணங்குகிறேன்)

சரணங்கள்

1

க்ஷீரவாராந்நிதி 4	—பாற்கடலில்
ச்வேதாந்தரீபபவ சித்ரமணி 4	—ச்வேதத்வீபத்திலுள்ள சித்திரமயமான இரத்தினங்கள் பதித்த
ஸௌதாஸ்திதம் 4 2	—மாளிகையில் வீற்றிருப்பவனும்
நாரதாத்யகிலமுனி 3 3 2	—நாரதன் முதலிய முனிவராலும்,
திவ்யபார்ஷத விஹகநாயக 3 3 3	—ஈச்வரனின் ஸமீபத்தில் வசிக்கும் நித்திய சூரிகள், கருடன் இவர்களாலும்
ஸதாராதிதம் 3 4	—நன்கு பூஜிக்கப்பட்டவனும்
ஸுர, பாஸுர ஸுதர்சன 4 3	—தேவர்களாலும், விளங்கும் சக்கரம்,
நந்தகப்ரமுக சோபநாயுத ஸேவிதம் 3 2 4 4	—வாள், முதலிய சிறந்த ஆயுதங்களாலும் ஸேவிக்கப்பட்டவனும்
ஸ்ரீரஸாகர ஸரோஜாம்ருதிதபாத 3 3	—லக்ஷ்மீதேவி, பூதேவி இவர்களுடைய கைகளால் பிடிக்கப்பட்ட தாமரைபோன்ற பாதங்களில்
வந்தாருஜன பாலனைத்யதம் 3 4 3	—வணங்கும் ஜனங்களைக் காப்பதில் நிகரற்று விளங்குபவனும் ஆன
பத்ம நாபம் 3 4	—ஸ்ரீ பதும நாபப்பெருமானை (நான் வணங்குகின்றேன்)

2

பரம பக்தோத்தம 4	—பக்தர்களில் சிறந்த
திவாகரய தீந்த்ரக்ருத 3 3	—'திவாகரன்' என்ற சன்னியாசியினுடைய
குருபுண்ய வஸுதாகதம் 3 4 3	—புண்ணியத்தால் பூமியில் அவதரித்தவனும்

ஸுருசிராத்புத பாலவேஷ 3 4 3	—கண்கள், மனம் இவைகட்கு ஆனந்தத்தையளிக்கும் பால வேஷம் தரித்த பத்மனாபனது
ஸாக்ஷாத் காரபரிதோஷித சிரலாளிதம்	—தரிசனத்தால் உண்டான ஆனந்தத்தையனுபவித்த திவாகர முனிவரால் போற்றப்பட்டவனும்
பரிபூஜனார்த்த ஸாளக்ராமஹரண 3	—பூஜை செய்யும்பொழுது ஸாளக்ராமங்களை எடுத்ததினால்
ஆத்ததரயோகி கரவாரிதம் 3	—திவாகர யதீந்திரனுடைய கைகளால் தள்ளப்பட்டவனும்
த்வரிதானுயாதயதி	—வேகமாகச்செல்லும் தன்னைப் பின்தொடர்ந்த திவாகர மகரிஷிக்கு
கருணாகுலானந்தபுர பாதபாத்ரஸிதம் 3 4	—அனந்தன் காட்டில் ஒரு மரத்தினடியில் வீற்றிருந்து தயவுடன் தரிசனமளித்தவனும் ஆன
பத்ம நாபம் 3 4	—ஸ்ரீ பதும நாபப்பெருமானை (நான் வணங்குகிறேன்)

3

கலிதநுதி ஸங்யாஸிப ஜனானுதுண 4 3	—திவாகரயதியினுடைய பஜனத்திற்குத் தக்கபடி
ஸுலளிதாகார மஹிதம்	--சிறிய ரூபம் தரித்து, அவரால் போற்றப்பட்டவனும்
கலுஷஹரபரி ஸரோஜ்வல	—பாபத்தை யகற்றுவதும், மனோரம்மியமுமான
பத்ம தீர்த்தாதி கண்டிதாசேஷதுரிதம் 3 2 3 2 3 3	—"பத்மதீர்த்தம்" என்ற புஷ்கரணியில் ஸ்நானம் செய்வதால் ஸகலபலன்களையளிக்கக்கூடியவனும்
கலசோத்பவான்வித மஹேந்த்ர 3 4 3	—அகஸ்தியமுனி, மஹேந்திர பர்வதம்,
த்ரிகூடமலயாசலேந்த்ரவினுதம் 3	—த்ரிகூடம், மலயபர்வதம் இவைகளால் துதிக்கப்பட்டவனும்
கலதமனவஞ்சி மார்த்தாண்ட வர்மாகலித 2 3 3	—துஷ்டநிக்ரஹம் செய்து வஞ்சிராஜ்யத்தை ஸ்தாபித்து மார்த்தாண்ட வர்மாவினால் நிறுவப்பட்ட
காஞ்சன விமானலஸிதம்	—தங்கவிமானத்தால் விளங்குபவனும் ஆன (பதுமனாபனை நான் வணங்குகிறேன்)

4

அருணாப மணிமகுட மகரகுண்டல 4 3	—சிவந்த இரத்தினங்கள் இழைத்த கிரீடம் மகர குண்டலம்
தாரஹார கௌஸ்துப பூஷிதம் 4 4	—நக்ஷத்திரஹாரம், கௌஸ்துபம் இவைகளையணிந்தவனும்
பரிவீத பீதாம்பராகலித காஞ்சிகா 3	—பீதாம்பரம், ஒட்டியாணம்
வரவந்ய மாலாஞ்சிதம்	—வனமாலை இவைகளையணிந்தவனும்
நிரவத்ய வஞ்சீசக்ருத 3	—அரசர்களுள் சிறந்தவனான வஞ்சி மன்னனால் ஏற்படுத்தப்பட்ட
லக்ஷதீபாதி நித்யோத்ஸவாநந்திதம் 3 3 3	—லக்ஷதீபம் முதலிய உத்ஸவங்களால் ஆனந்தத்தையடைந்தவனும்
ஸரஸீருஹோதர பலாசாயதாக்ஷிபுட 3	—தாமரையிதழ் போன்று அழகிய கண்களில்
பரிபூர்ண கருணாம்ருதம்	—கருணையாகின்ற அமுதம் நிறைந்தவனுமான
பத்ம நாபம் 3 4	—ஸ்ரீ பதுமநாபப்பெருமானை (நான் வணங்குகிறேன்)

ராகம் : குந்தலவராளி — தாளம் : ஜம்பை

ஆ: ஸமபதநிதஸ். — அ: ஸ்நிதபமஸ். (28-வது மேளத்தில் ஜன்யம்.)

பல்லவி

1. ஸா ; = மா : பா || தா பா = தநி தா : ||

போ . இ ந் த்ர | சா . | யி . ன ம்

தநி தநி = தப மா மா || பா தாநித = பத பமமா ||

பு . ரு . கு . ச ல | தா . . . | யி . னம் . .

2. ஸா : = மா : பா || நி த ப ம = நி தா : ||

போ . இ ந் த்ர | சா . . . | யி ன ம்

பா ஸ்நி = நித தப மா || பா த நி தா , நி = பா. தபமமா ; ||

பு ரு . கு . ச . ல | தா . . . . . | யி . . ன ம் . .

3. ஸா ; = மா ; பா || நி த ப ம = ஸ்ா நீ : ||

போ . இ ந் த்ர | சா . . . | யி ன ம்

நீ நி ப = தா தப மா || ப த நி த ம ப த ப = பத பமமா ; ||

பு ரு . கு ச . ல | தா . . . . | யி . னம் . .

மா மா = மா ஸா மா || பா நி நி = தப தா தா ||

பு ரு ஷ ம் சா | ச்வ த ம் | . . க ல

ஸ்ா : = : ; ; || ஸ் நி நி த = தப பம மா ||

யே . . . | . . . . | . . . . .

போகீந்த்ரசாயினம்.

அனுபல்லவி

தா : = பத நித பா || ப த ப த = பமமா தா ||

வா . இ . . ச | கௌ . . . | ரீ . . ச

நீ தா = ஸ்ா நீ ; || நி த ப ம = தா ஸ்ா ஸ்ா ||

வா . ஸ வா . | த்ய . ம . | ர ப ரி

1. ஸ்ா ; = ஸ்ா ம்ா ஸ்ா || நீ ; = நி த தா ஸ்ா ||

வா . ரா . பி | வ ந் | தி . . த

ஸ்ா நீ = நித தப மா || பா , த = ப ம மா ; ||

ப தம் ப . த் ம | நா . . | ப ம் . .

2. ஸ்ா ; = ஸ்ா ம்ா ஸ்ா || ஸ் நி நி த = தப மா தா ||

வா . ரா . பி | வ ந் . . | . . தி த

ஸ்ா ம்ா = ஸ்ா ; ஸ் த || ஸ் நி நி த = தப பமமா ; ||

ப தம் ப த் ம . | நா . . . | . . ப ம் . .

போகீந்த்ரசாயினம்

சரணம்

மா மா = மா ஸா ஸா || ஸ நி நி த = தா ஸா ஸா ||

க வி த நு தி | ஸ ந் . . | யா . ஸி

தா ஸா = மா ; பா || பா பா = தா பமமா மா ||

ப ஜ ஞ . னு | கு ண | வி ஹி . . த

நீ தா = நீ பா : || ப த நி த = பா மா பா ||

ஸ ல ளி தா . | கா . . . | ர ம ஹி

பம மா ; = ; ; ; || ப த நி த = தா தாநித பம ||

தம் . . . . | . . . . . | . . . .

நீ தா = தநி பா பத || மா மா = பா தா ; ||

க லு ஷ . ஹ ர . | ப ரி | ஸ ரோ .

நித பா = ஸ்நி நித பா || பா தாநித = பம மா மா ||

ஜ்வ. ல ப . . த் ம | தி . . . | ர்த்தா . தி

ஸா : = மா பா : || பா தாநித = பத நித பம . ||

க ண் டி தா . | சே . . . | ஷ . து . ரி .

பா ; = ; ; : || நி த ஸ்ா = ஸ்நி தாநிதபா தப ||

தம் . . . . | . . . | . . . .

மா மா = பா ; தா || த நி த நி = தப மா மா ||

க ல சோத் ப | வா . . ந் | வி . த ம

ஸ்நி நித = தா பா ; || ம ப ம ம = ஸா மா மா ||

ஹே . ந் த்ர த்ரி . | கூ . . . | ட வ ர

பா மா = தா பா நீ || நி த த . ப = மா நி நி த த ||

ம ல யா . ச | லே ந் . . | த்ர வி . நு .

ஸா ; = : ; ; || ஸ் நி நி த = தா ஸ்ா ; ||

தம் . . . . | . . . . | . . .

கலதமன | வஞ்சி மார்த் | தாண்டவர் | மா க லி த ||

காஞ்சனவி | மான லஸி | தம் பத்ம | நா பம் ||

"போகீந்த்ரசாயினம்"

இதை அனுபல்லவிபோலப் பாடவும்.

ராமுவினுடைய தகப்பனார் அவனை அடிக்கடி சினிமாவிற்கு அழைத்துச் செல்வதேயில்லை. எப்பொழுதாவது அவர் கூட்டிச்சென்று காண்பித்த படங்கள் வெகு நன்றாக இருந்தன. எதற்காக சிலர் சில படங்களை நன்றாக இல்லை என்று கண்டிக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை. எல்லாப் படமும் நன்றாகவே இருக்கும்; இந்தப்பெரியவர்கள் வேண்டுமென்றே 'அந்தப் படம் நன்றாக இல்லை, இது மோசம்' என்று தன்னைப்போன்ற சிறுவர்களை அழைத்துப் போகாமலிருப்பதற்காகவே கூறிக் கொண்டு பணத்தை மிச்சம் பிடிக்கப் பார்க்கிறார்கள் என்பது அவனுடைய தீர்மானம். தான்பெரியவனாக ஆனதும் செய்யவேண்டியவைகளைப்பற்றி ஒரு அட்டவணை தயாரித்து வைத்திருந்தான். அதாவது தன் தந்தையைப்போல் பெரியவனாக ஆனதும் ஊரில் வரும் எல்லா சினிமாப் படங்களையும் தான் பார்ப்பதோடல்லாது தன் குழந்தைகளையும் ஒவ்வொரு படத்திற்கும் கூட்டிக் கொண்டுபோக வேண்டும் என்பதும் ஒன்று.

ஒருநாள் கிருஷ்ணமூர்த்தி ராதையையும், ராமுவையும் சினிமாப் படம் பிடிக்கும் ஸ்டுடியோவிற்கு அழைத்துச் சென்றார். போகுமுன் ராமுவிற்கு அப்பாவிடம் உத்திரவு வாங்கவேண்டும் என்பது தெரியும். ஆனால் அப்பாவிடம் சொன்னால் போகவிடமாட்டார் என்பதையும் அவன் அறிவான். ஆகையால் தந்தையிடம் அவன் சொல்லிக் கொள்ளவே இல்லை. கிருஷ்ணமூர்த்தி, "அப்பாவிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டாயா?" என்று கேட்டபொழுது கொஞ்சம்கூடத் தயக்கமில்லாமல் தலையை ஆட்டிவிட்டான். அவன் பிறந்ததிலிருந்து சொன்ன பொய் இது ஒன்றுதான்.



ஆனால் அதைப்பற்றி யோசிக்க இப்பொழுது நேரமேது?

ஸ்டுடியோவில் பார்த்தவை யாவும் அவனுக்கு ஒரே பிரமிப்பைக் கொடுத்தன. திரும்பிய பிறகு ராதையின் தகப்பனாரிடம், "நிச்சயமாக நானும் ஒரு நடிகனாகப் போறேன்" என்றான்.

"ஆகா! கட்டாயம் ஆய்விடுவாய்." என்றார் கிருஷ்ணமூர்த்தி.

"அப்படியானால் இப்பொழுதே எனக்கொரு பாகம் கொடுங்கோ. பாட வேண்டுமானால் பாடிக் காட்டட்டுமா? என்றான் ராமு.

கிருஷ்ணமூர்த்தி சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

"நிச்சயமாக நான் நன்றாக நடிப்பேன். நீங்க வேணுமானா பரீட்சை வச்சு பாருங்கோ" என்றான் ராமு ரோஷத்துடன்.

"சரி ஆனால் நீ ஒண்ணு செய்யணும். வரப்போகும் பெரிய பரீட்சையில் நீ முதல் பையனாக இருக்கணும். அப்பத்தான் உன்னைச் சினிமாவில் சேர்த்துப்பேன்" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

ராமுவிற்கு ஒரே ஏமாற்றமாகப் போய்விட்டது. "ஊஹூம். அதுமாத்திரம் என்னால் முடியாது. பூகோளமும், கணக்கும் எனக்கு வரவே வராது. ஐயோ! இரண்டும் எவ்வளவு கஷ்டமான பாடம்!" என்று கூறி பெருமூச்சுவிட்டான் சிறுவன்.

கிருஷ்ணமூர்த்தி அவன் முதுகைத் தட்டிக்கொடுத்தார். "ஏன் அப்படி நினைக்கிறாய்? நான் உனக்குப் பூகோளத்தையும், கணக்கையும் சொல்லித்தருகிறேன். நீ எவ்வளவு கெட்டிக்காரனாகி விடுகிறாய், பார்!" என்று கூறி அவனைச் சந்தோஷப்படுத்தினார்.

* * * * *

அடுத்த தினத்திலிருந்தே ராமு, இரு பெரிய பிசாசுகளான பூகோளத்தினிடமும், கணக்குப்பாடத்தினிடமும் ராதையின் தகப்பனார் உதவி கொண்டு போர் துவக்கினான். இப்பொழுதெல்லாம் அவன் முன்னைவிட அதிக நேரம் ராதையின் வீட்டில் தங்க ஆரம்பித்தான். ராதையின் தந்தை உபாத்தியாயராக ஆனபிறகு அந்த இரண்டு பாடங்களும் அவனுக்கு மிகவும் பிடித்த தாகி விட்டன.

முதன் முதலில் ராமு, ராதையின் தந்தையைக் கண்டபொழுது அவர் பேசிய பேச்சுக்களும் காற்றாடி விடுவதில் தன்னோடு போட்டி போட முடியுமா என்று கேட்டதும் அவனை அவர்பால் ஆகர்ஷித்தன. பின் அவருடைய கதைகள் அவன் உள்ளத்தில் அவருக்கு ஒரு நிரந்தரஸ்தானம் கொடுக்க வைத்தன. மேலும் அவர் ராதையிடம் காட்டும்-பொழியும் —அளவற்ற அன்பு அவனை அவரிடம் இழுத்தது. அவருடைய விசாலமான இதயத்தைக்கண்ட அவன் நெஞ்சம் விம்மித் தணிந்தது. பிறகு அவர் பாடம் கற்றுத் தரும் விதம் அவனை ராதையின் தகப்பனாரைப்போல் இந்த அகண்ட ஆகாயத்தின் கீழ், இந்த எண்ணிறந்த நட்சத்திரங்களின் கீழ் ஒருவர் கூட இருக்கவே மாட்டார்கள், என்று எண்ணவைத்தது. சாப்பாடும், தூக்கமும் தவிர மற்றவைகளைப் பொறுத்த வரையில் ராதையும், ராமுவும் சொந்த சகோதரி, சகோதரன்போலவே பழகி வந்தனர்.

ராமுவினுடைய பெற்றோர்கள் இவன் செய்கைகள் யாவற்றையும் வெறுத்தனர். "இதோ பார், ராமு! இனி மேல் ராதையின் வீட்டு வாயிற்படியில் காலை வைத்தாயோ, உறிச்சுடுவேன்" என்று அவன் தகப்பனார் அடிக்கடி கூறிவந்தார். ஆனால் சொல்லியது வாய்ப் பேச்சோடு இருந்து, செய்கையில் வரவில்லையாதலால் அவனுடைய தினசரி அட்டவணையை மாற்றிக்கொள்ளக் காரணம் எதுவும் இருக்கவில்லை.

சிலசமயம் தந்தையிடம், "ராதையின் வீட்டுக்குப் போனால் என்ன? அதில் என்ன தப்பு இருக்கிறது?" என்று கேட்பான்.

"சொன்னால் உனக்குப் புரியாது" என்பார் தகப்பனார்.

"அப்படியானால் நான் ஏன் அவருடன் நெருங்கிப் பழகுகிறேன் என்பதும் உங்களுக்குப் புரியாது" என்று தனக்குள்ளாகவே கூறிக் கொள்வான். அதனால் எப்பொழுதும் போலவே தன்னிஷ்டப்படி நடந்துவந்தான்.

தன் தந்தையும், அத்தெருவிலுள்ள மற்றவர்களும் ஏன் ராதையின் தந்தையை வெறுத்து வந்தார்கள் என்பது அவனுக்குத் தெரியவில்லை. பாலகோபால நாயக்கர் இருந்தவரையில் அவன் அந்தச் சிறு பங்களாவிற்குச் செல்வதை ஒருவரும் தடுக்கவில்லை. இப்பொழுது மாத்திரம் ராதையின் வீட்டிற்குச் செல்வதை ஏன் தடுக்கிறார்கள்? இக் கேள்விக்கு அவனுக்குப் பதிலே தெரியவில்லை.



ஒரு சமயம் அவன் வீட்டில் ஒரு விருந்து நடந்தது. இரவு சாப்பாடு முடிந்ததும் படுக்கையில் படுத்திருந்தான். அப்பொழுது அடுத்த அறையில் அவனுடைய தகப்பனாரும்,

விருந்தாளிகளும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பேச்சுத் தெளிவாக அவனுடைய காதுகளில் விழுந்து கொண்டிருந்தது.



அதன் சாராம்சம் இதுதான். கிருஷ்ணமூர்த்தி. ஒரு பெரிய குடிகாரன்......எப்பொழுதும் ரோடில் விழுந்து புரண்டு கொண்டிருப்பான்... இரவு வெகுநேரங் கழித்து வீட்டிற்குவந்துகூச்சல்போடுவான்; இன்னும் மனைவியைக் கூட உதைப்பான்......பணத்தை அநாவசியமாகச் செலவு செய்கிறான்......நல்ல உயர்தர நடிகன்—கலைஞன் என்பது வாஸ்தவம் தான். ஆனால் மனிதனுக்கு நல்ல நடத்தை இல்லாவிடில் என்ன பிரயோஜனம்......அவனுடைய கலைத்திறனைக் குப்பையில் போடவேண்டியது தான். ......இந்தத் தெருவில் இவன் குடிவராமலிருந்திருந்தால் மேலாக இருக்கும்.

யாவரும் எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று ராமுவிற்குத் தெரியாது. முடிவில் வந்திருந்தவர்கள் அவனுடைய தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டனர். வீட்டு விளக்குகள் யாவும் அணைக்கப்பெற்று நிசப்தம் எங்கும் சூழ்ந்துகொண்டது. ஆனால் ராமுவிற்குமட்டும் தூக்கம் அறவே இல்லை.

(தொடரும்)

லண்டன் சென்றிருந்த "ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாஸனும், "மித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸனும் சென்ற ஞாயிறன்று விமானத்தில் மீனம்பாக்கத்தில் வந்திறங்கியபோது எடுத்த படம்.

7

சேக்கிழாரும் அரசு முறையும்

பி. ஸ்ரீ.

★

குடியரசு தமிழர்களுக்குப் புதிதென்றும், முடியரசே தமிழ் நாட்டில் நிலவி வந்ததென்றும், தமிழரசர்கள் சர்வாதிகாரிகளைப் போலவே நடந்துகொண்டார்களென்றும், சாதாரணமாய்க் கூறுவதுண்டு. இராஜத் துரோகம் என்பது தமிழர்கள் என்றுமே செய்தறியாததொன்று எனப் பெருமை பாராட்டிக் கொள்வோரும் உண்டு.

பொதுஜன பயங்கரன் அல்ல

ஆனால் பொதுஜனத் துரோகம் என்ற குற்றத்தையும் தமிழரசர்கள் செய்தறியார்கள் என்று துணிந்து கூறலாம்.

மாநிலம்கா வலனுவான்
மன்னுயிர்காக் குங்காலைத்,
தான்அதனுக்(கு) இடையூறு
தன்னால், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத்திறத்தால்,
கள்வரால், உயிர்தம்மால்,
ஆனபயம் ஐந்தும்தீர்த்(து)
அறம்காப்பான் அல்லனோ?

[மாநிலம்—(இங்கே) இராஜ்யம்.]

என்பதைச் சேக்கிழார் சுவாமிகளின் சிறந்த அரசியல் கொள்கையாகக் கருதலாம்.

'எங்கே தலை நிமிர்ந்திருக்கிறதோ, உள்ளம் அச்சமின்றி இருக்கிறதோ......அத்தகைய சுயராஜ்யமாகிய சொர்க்கத்தில் எந்தையே! என் நாடு விழித்துக்கொள்ளட்டும்' என்று ரவீந்திரநாத தாகுர் பாடியிருக்கிறாரல்லவா? குடிகளுக்குப் பயம் ஏற்படாமல் காப்பது அரசர்களின் அதிமுக்கியமான கடமை என்பது தாகுரின் கருத்து. சேக்கிழார் பெருமானும், ஐவகைப் பயமும் ஏற்படாமல் குடிகளை அரசன் காக்கவேண்டுமென்கிறார். அரசனைக்கண்டு குடிகள் அஞ்சவே கூடாது, அரசன் அப்படி ஆட்சி செலுத்தவேண்டும் என்கிறார். 'அரசன் காவலன்; பொதுஜன பயங்கரன் அல்ல' என்பது சேக்கிழார் கருத்து.

அரச அடையாளங்கள்

தன்னால் குடிகளுக்கு அச்சம் ஏற்படாததுபோல், தன்பரிஜனத்தாலும் ஏற்படாதபடி ஆட்சி நடைபெற வேண்டும் என்கிறார். வெளிநாட்டுப்பகைவராலும், உள்நாட்டுப் பகைவராலும் உள்நாட்டுப் பகைவரான கள்வராலும் கலகமோ, கலக்கமோ ஏற்படக்கூடாது என்கிறார். பிற உயிர்களாலும் அச்சம் ஏற்படாதபடி குடிகளைத் தாங்குவது அரசன் கடமை என்கிறார். இத்தகைய உயர்ந்த நோக்கத்திற்கு அறிகுறிதான் பொன் முடியும் வெண்குடையும் செங்கோலும்,

'முறை புரியும்
தனித் திகிரி'யும்.

[முறை—நீதி முறை. தனித் திகிரி—ஆணைச் சக்கிரம் அல்லது ஆக்ஞா சக்கிரம்.]

காட்டரசரான வேடர்களுக்கு வில் அரச அடையாளம் என்று காட்டும் சேக்கிழார் பெருமான், நாட்டரசர்களுக்குக் குளிர் வெண்குடையையும், கோணாத செங்கோலையும், ஆக்ஞா சக்கிரத்தையும் அரச அடையாளங்களாக வற்புறுத்துவது கவனிக்கத் தக்கது. குடிகள் பசியால் வருந்தாமல் அச்சமற்ற சுக வாழ்வு வாழ்வதற்கும், மதச் சுதந்திரத்துடன் வாக்குச் சுதந்திரமும் உள்ளவர்களாய் அற வாழ்வு வாழ்வதற்கும் இன்றியமையாத வசதிகளைத் தமிழரசர்கள் செய்து கொடுத்திருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. அத்தகைய தருமக் காவலின் அடையாளங்களாகவே கோலும் குடையும் சக்கிரமும் கருதப்பட்டன.

அரசரும் அமைச்சரும்

குற்றங்களைத் தண்டிப்பதில் ஜாக்கிரதையாக இருந்ததுபோல், குற்றங்களைத் தடுப்பதிலும் ஜாக்கிரதையாக இருந்தார்கள் அரசர்கள். நீதி பரிபாலனத்திலும், வந்த பின் காப்பைக் காட்டிலும் வருமுன் காப்பே நல்லரசின் நன்முறை என்று அறிந்திருந்தார்கள். இத்தகைய கடமை அமைச்சர்களின் விசேஷமான கடமையாகக் கருதப்பட்டது. அரசர்கள் நெறி தவறியபோதிலும் அவர்களை வழிக்குக் கொண்டுவர

வேண்டியதும் அமைச்சர்களின் கடமையாகக் கருதப்பட்டது. மனிதர்களோடு மற்ற உயிர்களுக்கும் போதுமான பாதுகாப்பு அளிப்பது அரசர் கடமையாகவும், விசேஷமாக அமைச்சர் கடமையாகவும் கருதப்பட்டது.

வீரமும் அதிவீரமும்

தமிழர்கள் அந்நாளில் சிறந்த போர்வீரர்களாக இருந்தார்கள். வேற்றரசர்களோடு போர்புரிந்ததுபோல் தமிழரசர்கள் தங்களுக்குள்ளும் ஒற்றுமையில்லாமல் போர்புரிந்த வண்ணமாய் இருந்தார்கள். எனினும் போர்களிலும் வஞ்சனை புரியப் பின்வாங்குவார்கள். யுத்தத்திலும் தருமயுத்தமே செய்வார்கள். ஆயுதம் இல்லாதவர்களையும், பெண்களையும், சாதுக்களையும், நோயாளிகளையும் பசுக்களையும் கொல்லக்கூடாது என்ற தருமத்தை யுத்தகாலங்களிலும் இயன்றவரை அனுஷ்டித்து வந்தார்கள்.

இத்தகைய வீரத் தமிழர்களும் சாத்துவிக வீரத்தையே அதிவீரமாகப் போற்றி வந்தனர். பெரிய புராணத்திலே நாம் சந்திக்கும் மெய்விளங்கிய அன்பர் கூட்டத்திலேயே சிறந்த போர்வீரர்களையும் போர்த் தலைவர்களையும் சந்திக்கிறோம். எனினும் இந்த அடியார்களும் பிறநும் சாத்துவிக வீரத்தையே அதிவீரமாக மதித்தனர்.

ஈர அன்பினர்,
யாதும் குறைவிலார்
வீரம் என்றால்
விளம்பும் தகையதோ?

[விளம்பும்-சொல்லும். தகையதோ–தன்மை வாய்ந்ததோ.]
என்று சேக்கிழார் பெருமான் போற்றும் அடியார்களின் வீரம் அதிவீரமாகிய சாத்துவிக வீரம்.

அந்நாளிலும் சத்யாக்கிரகம்

இத்தகைய வீரத்தைக் காந்தியடிகளின் சத்தியாக்கிரக வீரத்துடன் ஒப்பிடலாம்.. இந்த அதிவீரம்போல் பக்தியிலிருந்து பிறந்ததுதானே சத்தியாக்கிரக வீரமும்? எண்ணாயிரம் சமணர்கள் மந்திர தந்திரங்களில் வல்லவர்— அதிசய ஞானச் சிறுவராகிய திருஞானசம்பந்தரைச் சூழ்ந்து கொண்டதும் அப்பெருமான்,

ஈனர் கட்(கு)எளி யேன்அ
[லேன்,திரு
ஆல வாய்அரன் நிற்கவே!

[ஈனர் - அறிஞர் பழிக்கும் கெட்ட காரியங்களைச் செய்கிறவர்கள். ஆலவாய் அரன்–மதுரையில் கோயில்கொண்டிருக்கும் சிவபெருமான்.]

என்று எத்தகைய அதிசய வீரத்துடன், வெற்றியில் தமக்குள்ள நம்பிக்கையை வெளியிடுகிறார்!



நாயன்மார் திருக்கூட்டத்தில் திருஞான சம்பந்தருக்கு அடுத்தபடியாக மதிக்கப் பெறுகிறவரும், பழுத்த கவிச் சுவையிலும் வாக்கு வளத்திலும் ஞானசம்பந்தரையே வென்று விடுகிறவருமான திருநாவுக்கரசு என்ற அப்பர் சுவாமிகளின் சரித்திரத்தைத் தான் பாருங்கள். அது ஸாராம்சத்தில் ஒப்பற்ற சத்தியாக்கிரகி ஒருவரின் சரித்திரமல்லவா? பல்லவமன்னன் இவரை இடறிக் கொல்லும்படி யானையை ஏவி விடுகிறான். அப்பரோ, 'என் அப்பன் இருக்க, எனக்கு என்ன பயம்?' என்று கருதியவராய் அப்படியே அஞ்சாமல் அசையாமல் நிற்கிறாராம், மதயானை வரும் வழியிலே.

அன்றும் உண்ணாவிரதம்

சத்தியாக்கிரகியான மகாத்மா காந்தி உண்ணாவிரதம் கிடந்து காரியசித்திபெற்றாரென்பதை நன்கறிவோம். திருநாவுக்கரசரும் உண்ணாவிரதம் கிடந்ததாகப் பெரியபுராணம் தெரிவிக்கிறது. சமணர்கள் ஒரு சிவன் கோயிலை மறைத்துத் தங்கள் பள்ளியாக்கிக்கொண்டார்களாம். அது கேட்ட அப்பர் அந்தக்கோயிலின் முன்னேபோய், 'இச்சிவபெருமானை வணங்கியல்லாமல் அப்புறம் நான்போவதில்லை' என்ற மன உறுதியுடன் உண்ணாவிரதம் கிடந்தார்.

இவ்வரலாற்றில் சேக்கிழார் பெருமானும் ஈடுபடுகிறார். ஈடுபட்டுத் தமது 'திருநாவுக்கரசு நாயனார் புராண'த்திலே,

வண்ணம் கண்டு
நான், உம்மை
வணங்கி அன்றிப்
போகேன் என்(று)
எண்ணம் முடிக்கும்
வாகீசர்
இருந்தார், அமுது
செய்யாதே!

[வாகீசர்—திருநாவுக்கரசர். அமுதுசெய்யாதே—உணவுகொள்ளாமல்.]

என்று உருக்கமாய்ப் பாடுவதைக் கேளுங்கள்.

ஆகவே, அந்நாளிலும் தமிழர்களின் அரசியலும், சமுதாய இயலும் நல்ல ஆரோக்கிய நிலையில் அமைந்திருந்ததாகக் கருதலாம்.



யுத்தத்தின்போது இந்தியா, பிரான்ஸ் ஆகிய இரு தேசங்களிலும் முடக்கிவைத்திருந்த உடைமைகளைப் பொறுத்து பரஸ்பரம் திரும்பப் பெறுவதற்காகச் சென்ற 15-ந்தேதியன்று இந்தியாவுக்கும், பிரான்ஸுக்கும் ஓர் ஒப்பந்தமேற்பட்டது. இந்தியாவுக்காக நேருவும், பிரான்ஸுக்காக தூதர் டேனியல் லெவியும் ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்கின்றனர்.

டாமியும் டில்லியும்

★

ஸ்ரீமதி ராஜலட்சுமி

ஒரு பணக்கார வீட்டில் ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் இருந்தார்கள். பையன் பெயர் கேசவன். பெண்ணின் பெயர் காமாட்சி. அவர்களை செல்வமாக வளர்த்து வந்ததினால் கேசு என்றும் காமு என்றும் அவர்களை அழைப்பார்கள்.

கேசுவுக்கு ஒருநாய்க்குட்டி வாங்கிக்கொடுத்திருந்தார்கள். காமுவுக்கு நாயைக்கண்டால் பிடிக்காது. அதனால் அவளுக்கு பூனைக்குட்டி வாங்கிக் கொடுத்திருந்தார் அவர்களுடைய அப்பா. நாய்க்கு டாமி என்றும் பூனைக்கு டில்லி என்றும் பெயர் வைத்திருந்தார்கள் சிறுவர்கள்.

கேசு நாய்வைத்துக்கொண்டிருப்பதனால் காமுவுக்கு அவனைக்கண்டால்பிடிக்காது. அடிக்கடி அவனுடன் சண்டை போடுவாள். அதே போல் கேசுவுக்கும் பூனையைக் கண்டால் பிடிக்காது. அதனால் காமுவிடம் சண்டை போட்டுக் கொண்டிருப்பான்.

ஒருநாள் டில்லி 'மியாவ் மியாவ்'என்று ஓயாமல்கத்திக் கொண்டே காமுவின் காலை சுற்றிச் சுற்றி வந்தது. என்றுமில்லாமல் இப்படி கத்துவதைக் கண்ட காமு "எதற்கு கத்துகிறாய் டில்லி?" என்று சொல்லி அதைத் தூக்கி தன் மடியில் வைத்துக்கொண்டு தடவிக்கொடுத்தாள். "இந்த டில்லி ஸோபாவின்மீது ஒய்யாரமாக உட்கார்ந்துகொண்டிருந்தது. இதற்கென்ன இவ்வளவு கொழுப்பு என்று நான்தான் அதைப்பிடித்துக் கீழே தள்ளினேன்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான் கேசு. காமுவுக்குக் கோபம் தாங்கமுடியவில்லை.

மற்றொரு நாள் டாமி அப்பாவின் மேஜைமேல் உட்கார்ந்துகொண்டிருந்தது. உள்ளே வேறு யாருமில்லை. சமயம் பார்த்துக்கொண்டேயிருந்த காமு டாமியை மேஜைமேலிருந்துகீழேதள்ளிவிட்டாள். டாமி 'வள் வள்' ளென்று குரைத்துக் கொண்டே கேசுவின் அருகில் வந்து குதித்தது. "ஏன் குரைக்கிறாய் டாமி? காமு உன்னை அடித்தாளா?" என்றவாறே, "காமு, என் டாமியை என்ன செய்தாய்? சொல்லி விடு" என்று கத்தினான். "நான் அடிக்கவில்லை. ஆனால் அதற்கு என்ன அவ்வளவு கொழுப்பு? அப்பாவின் மேஜையின்மேல் ஒய்யாரமாக உட்கார்ந்திருந்தது அதனால் அதைக் கீழே தள்ளினேன் நீ அன்று என் டில்லியைத் தள்ளவில்லையா?" என்று கேட்டாள் காமு.

இருவருக்குமிடையே சண்டை மூண்டது. அவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் பொழுது டாமியும், டில்லியும் எங்கோ ஓடிவிட்டன. இருவரும் அதை கவனிக்கவில்லை. சண்டை பலமாகி சத்தம் அதிகமாகவே அவர்கள் அப்பா ஓடி வந்தார். இரண்டு பேரும் சண்டை போடுவதைப் பார்த்து விட்டு, "கேசு, காமு, இங்கே வாருங்கள். என் அறையில் போய்ப் பாருங்கள்" என்றார். தங்களை அடிக்கத்தான் கூப்பிடுகிறாரோ என்று பயந்தவாறே அவர் அறைக்குச் சென்றார்கள்

அங்கே அவர்கள் என்ன பார்த்தார்கள் தெரியுமா? அப்பாவின் மேஜைமேல் டாமியும், டில்லியும் ஒன்றையொன்று ஒட்டிக்கொண்டு ஜம்மென்று உட்கார்ந்து கொண்டிருந்தன. கேசுவுக்கும்,காமுவுக்கும் ஆச்சரியமாயிருந்தது.

"பார்த்தீர்களா. நீங்கள் இருவரும் அண்ணன், தங்கைகள் தானே. எப்படி சண்டை போடுகிறீர்கள். இவைகள் இரண்டும் நாயும், பூனையும் தானே. எவ்வளவு ஒற்றுமையாக இருக்கின்றன பாருங்கள். இனிமேலாவது நீங்கள் சண்டை போடாமல் அவைகளைப்போல் ஒற்றுமையாய் இருங்கள்" என்றார் அவர்கள் அப்பா.

"ஆகட்டும், அப்பா என்று இருவரும் தங்கள் டாமியையும், டில்லியையும் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார்கள்.

சகோதரன் ஹரி,
"குலிஸ்தான்"
கார், பம்பாய் 21.

—✿—



குடந்தை டி. எஸ். ஆர். கம்பெனி சொந்தக்காரர் ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலய்யங்கார் குமாரத்தி ஸௌ. ரங்கநாயகிக்கும், நாகர் கோயில் ஸ்காட் கிறிஸ்துவக் காலேஜ் லெக்சரர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணமாசாரியாரின் குமாரன் டாக்டர் கே. ராஜகோபாலன் எம். பி. பி. எஸ்ஸுக்கும் சமீபத்தில் விவாஹம் நடைபெற்றது.



மாஜி அயர்லாந்து பிரதமர் மிஸ்டர் டிவேலரா சமீபத்தில் புதிய டில்லிக்கு வந்தபோது கவர்னர் ஜெனரலின் காரியதரிசியும் செய்தி இலாகா பிரதம ஆபீஸர் ஸ்ரீ ஏ. எஸ். அய்யங்காரும் வரவேற்றனர்.



கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகிய மவுண்ட்பேட்டனுக்கு 16-ந்தேதி இரவு கவர்ன்மெண்ட் மாளிகையில் டில்லி நகரசபை ஓர் பிரிவு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தது. முனிசிபல் தலைவர் ஸர் ஆர்தர் டீன் பேழையை லார்டு மவுண்ட்பேட்டனுக்கு வழங்கினர்.



கொடுமுடி ஸ்ரீ வி. வேங்கட சுப்பிரமண்ய ஐயரின் புதல்வரும், புதிய டில்லி தொழில் சுரங்கம், விசை இலாகா மந்திரி சபைக் காரியாலயத்தைச் சேர்ந்தவருமான ஸ்ரீ கே. வி. பிரணதார்த்திஹரன் பி ஏ. ஆனர்ஸுக்கும், திருவனந்தபுரம் ஸ்ரீ ஸி. எஸ். நாராயணய்யரின் புதல்வி ஸௌ. மீனாட்சிக்கும் சமீபத்தில் விவாஹம் நடைபெற்றது.



சந்தனத்தின் ஔஷத குணங்கள்

வைத்திய ரத்ன பண்டித
எம். துரைசாமி ஐயங்கார்

சந்தனத்தின் நறுமணத்தையும் குளிர்ச்சி தரும் குணத்தையும் பாராட்டி, இதை நெடுநாட்களாக இத்தேசத்தில் சுப காரியங்களில் கூட முதலில் உபயோகிக்கும் உயர்ந்த வஸ்துவாக வழங்கி வருகிறார்கள். மனோஹரமான மங்களகரத் திரவியமாய் உபயோகிக்கப்படுவதுடன் சிறந்த மருந்தாகவும் வைத்தியர்களால் கருதப்படுகிறது. "யாஸ்கருடைய நிருக்தக் கிரந்தத்தில் கி. மு. 5-ம் நூற்றாண்டிலேயே சந்தனம் சிறந்த ஔஷத குணங்கள் பொருந்தியதாகக் கூறப்பட்டிருப்பதையும், ஹிந்துக்களுடைய பிராசீன வைத்திய நூல்களிலும் மூத்திராவயவ ஸம்பந்தமான வியாதிகளில் சந்தனம் ஏற்ற ஔஷதமாக உண்மையறிந்து உரைக்கப்பட்டிருப்பதையும் கவனிக்க நாம் வியப்புறுகிறோம்" என்று 'க்வார்டர்லி டாக்டர்' என்ற வைத்தியப்பத்திரிகை ஒரு வியாஸத்தில் குறிப்பிடுகிறது. சீன தேசத்து வைத்தியர்களும் வெகு காலமாகவே பூய மேஹம் என்ற கீழ் மேஹ ரோகத்தில் சந்தனத் தைலத்தை முக்கிய மருந்தாகப் பிரயோகித்து வருகிறார்கள். மேல் நாட்டில் இதாலியிலுள்ள ஸாலெர்னோ என்னும் ஊரிலிருந்த கான்ஸ்டாண்டினஸ் ஏப்ரிகானஸ் என்ற வைத்தியர் ஆதியிலும், பிறகு 1750-இல் ஆம்ஸ்டெர்டாமில் ரம்பியஸ் (Rumbh'us) என்னும் வைத்தியரும் இச்சரக்கின் உயர்குணங்களை (முக்கியமாய் மூத்திர ரோகங்களில்) கண்டறிந்து வெளியிட்டார்கள். இக்காலத்தில் ஏதேதோ ஆராய்ச்சிகள் மூலம் புதிதாகக் கண்டறிந்ததாகக் கருதப்படும் இச்சரக்கைப் போன்ற பல்வேறு சரக்குகளின் குணுகுணங்களையும் உபயோகங்களையும் ஆயுர்வேதாசிரியர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து நூல்களில் விளங்க எழுதி வைத்திருப்பதை மேனாட்டுச் சாஸ்திரக்ஞர் போற்றுவதைக் கொண்டாவது நமது நாட்டினர் கவனிப்பாராக. வெட்டை என்கிற சீழ்மேஹத்தில் உபயோகிக்கக்கூடிய சந்தனாதி சூர்ணம், சந்தனாவலேஹம், சந்தனாஸவம் என்பவையும், வாத ரோகங்களில் மேலுக்கு உபயோகிக்கக்கூடிய சந்தனாதி தைலமும், லாக்ஷா சந்தனாதி தைலமும் இதில் முக்கியமானவை.

இரஸபஸ்மம், ஸ்வர்ணபஸ்பம், அக்ரகபஸ்பம், தாளகபஸ்பம் முதலிய தாதுவர்க்க பஸ்பங்களாகிய இராஜம்ருகாங்கம் என்னும் இவ்வௌஷதம் க்ஷயரோகத்தில் மிகவும் உபயோகமானதென்று ஆயுர்வேத இரஸசாஸ்திரத்தில் மிக்க உயர்வாகக் கூறப்பட்டுள்ளது. இதை உபயோகித்த ஒரு மேனாட்டு வைத்தியர் 'பிராக்டிகல் மெடிஸின்' என்னும் வைத்தியப் பத்திரிகையில் சமீபத்தில் தன் அனுபவங்களை விளக்கி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இராஜ்ம்ருகாங்கரஸம் என்னும் ஆயுர்வேத மருந்தை இரண்டு க்ஷயரோகிகளுக்கு ஒழுங்காகப் பல வாரங்கள் தொடர்ந்து கொடுத்து வந்தேன். ஒருவருக்குப் பஸ்மமாகவே வேளைக்கு 8-அல்லது 10-கிரைன் வீதமும், மற்றொரு பெண்பிள்ளைக்கு மாத்திரை உருவாக வேளைக்கு 2-அல்லது 3-மாத்திரை வீதமும் கொடுத்து வந்ததில், முதல் பிணியாளிக்கு 2 மாதங்களிலும் மற்றொரு பிணியாளிக்கு நான்கு மாதங்களுக்குப் பிறகும் க்ஷயரோக ஸம்பந்தமான குறிகளெல்லாம் தணிந்துபோய், இருவருக்கும் தேக பலமும் கிரமமாக திருப்திகரமான நிலைமைக்கு வந்தது. அவர்களின் கோழையை பரிசோதித்ததில், க்ஷயரோகக் கிருமிகள் சொற்பம் காணப்பட்டபோதிலும், ஔடதத்துடன் காட்லிவர் ஆயிலையும் சிறிது உபயோகிக்கச் செய்த பிறகு, இருமல், உடலிளைப்பு மாலைக் காய்ச்சல் முதலியவை முற்றிலும் நிவர்த்தியாய், பசியும் தேகபலமும் அதிகரித்து, பிணியாளிகள் தென்புடன் தமது இயற்கை வாழ்க்கையில் ஈடுபடலாயினர். ஜுரத்துடன் கூடிய க்ஷயரோகத்தில் இராஜம்ருகாங்கத்துடன் பஞ்ச திக்தரஸக்ரியா என்னும் மருந்தையும், ஜ்வரமில்லாத பலக்குறைவுடன் வருந்தும் க்ஷயரோகிகள் இராஜம்ருகாங்கத்துடன் ஆயுஷ்யரஸாயனம் என்னும் ஔஷதத்தையும் உபயோகிப்பது நலம்.

குழந்தைகளில் சில காலில் வலிமையில்லாமல் நடக்க முடியாமல் இருப்பதைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கும். இந்நிலைமைக்குக் காரணங்கள் பல. அடியிற் குறிக்கப்படும் பல்வேறு காரண வகுப்புகளைப்படித்

தறிந்து, அக்காரணங்களைப் பரிகரித்தால் குழந்தைகளுக்கு அங்க வைகல்யம் (அவயவக் கோளாறு) நிரந்தரமாயேற்படாதபடி தடுத்துக்கொள்ளலாம்.

பிறவி ஒழுங்கீனங்கள்: (1) கடி ஸந்தி என்கிற இடுப்பிலுள்ள எலும்புப்பூட்டு நழுவுதல். (2) பாதம் பக்கவாட்டில் அல்லது பின்புறமாகத் திரும்பியிருத்தல். இவற்றில் தகுந்த நிபுணர்களைக் கொண்டு பிண்டதைலம் முதலியதைவிட்டுத்தேய்த்து, மிருதுவாக செய்வதும், நாள்தோறும் மர்த்தனம், எலும்புகளை ஏற்றவாறு பதியச்செய்ய பந்தனங்கள் இடுவதும் அவசியம். இளமைப் பருவத்திலேயே ஏற்ற பரிகாரம் செய்வது அதிக பலன் தரும். (3) மந்யாஸ்தம்பம் என்னும் வாதலோகத்தினல் கழுத்தெலும்பு அசைக்கமுடியாமல் போதல். இதற்கு விச்வவாதாரி தைலத்தை இட்டு மெதுவாக உருவி விடுவதும் உள்ளுக்கு மௌக்திக பஸ்பம் (ஏழெட்டு நெல்லெடை) கொடுப்பதும் நலம்.

2. வியாதிகளாலான ஒழுங்கீனம்: (1) எலும்புப் பூட்டுகளில் க்ஷய ரோகக்கோளாறு தோன்றல். (இதை கீல்வாயுவென்று சிலர் பிரமிப்பதுண்டு) இதில் மஹாநாராயண தைலத்தை மேலே தேய்ப்பதுடன் இராஜம்ருகாங்கம் என்ற மருந்தை தொடர்ந்து கொடுத்து வரலாம். (1) பால வாதரோகத்தினல் குழந்தைகள் கைகால்களை ஏற்றவாறு உபயோகிக்க வல்லமையிழப்பதுண்டு. இதற்கு மேலே விச்வவாதாரி தைலம் அல்லது க்ஷீரபலா தைலம் தேய்த்து உருவுவதற்கும், உள்ளுக்கு வாதாக்னிகுமாரம் (வேளைக்கு ஐந்தாறு நெல்லெடை வீதம் தினம் 3 முறை) என்கிற மருந்தும் வெகு உபயோகமாவிருக்கும். (3) ஏற்றவாறு தாது போஷணை இன்மையால் பக்கரோகம் உண்டாய், குழந்தைகள் எழுந்து நடக்க முடியாமற் போகும். இதில் நல்ல போஷணை தரும் உணவுகளைக் கொடுத்துக் கொண்டு, உள்ளுக்கு ஆயுஷ்ய ரஸாயனமும், மௌக்திக பஸ்பமும் கொடுத்து வருவதால் காலக்கிரமத்தில் கைகால்களுக்கு வன்மையேற்பட்டு குழந்தை எழுந்து நடக்க முயலும்.

3. அபிகாதம் அல்லது தாக்குதல்:—(1) எலும்பு முறிதல். இதையும் தகுந்த நிபுணர்களைக் கொண்டு, முறிந்த பாகங்களை ஒழுங்குபடுத்தி பந்தனம் செய்து எலும்புகள் ஒன்று சேர்ந்து பலம் பெறும் வரையில் குழந்தையைப் படுக்கையில் விட்டிருக்க வேண்டும். (2) அக்னிதாஹம் என்னும் நெருப்புப்புண். இதனால் விரணங்கள் ஏற்படுவதுடன், கைகால்கள் அசைக்கமுடியாமற்போவதுண்டு. தக்த்த விரணங்களை (எரிப்புண்களை) ஜாத்யாதிக்ருதம் அல்லது காஸீஸாதிக்ருதம் என்ற மருந்துகளைத் தடவி ஆற்றிவிட்டு (விரணங்கள் ஆறியபிறகு) எலும்

அட்டைப்படம்

★

சென்ற 14-ந்தேதியன்று பிரதம மந்திரி பண்டித நேரு டில்லியில் அயர்லந்தின் குடியரசுத் தலைவராயிருந்த மிஸ்டர் டிவேலராவுக்கு ஓர் விருந்து நடத்தினர். அவ்விருந்தில் ஸர்தார் பலதேவ் ஸிங், ஒரிஸா கவர்னராகப் பதவி ஏற்றிருக்கும் ஜனுப் அஸப் ஆலி, ஸ்ரீமான் என். கோபாலஸ்வாமி ஐயங்கார் முதலியவர்கள் இதில் கலந்துகொண்டார்கள். நேருவோடும் மற்ற மந்திரிகளுடனும் மிஸ்டர் டிவேலரா சம்பாஷிக்கிருர்.

ராஜா ஸர் அண்ணுமலைச்செட்டியார் சென்ற வாரம் காலமானுர். இவருக்கு வயது 67. அண்ணுமலை சர்வகலாசாலையை ஸ்தாபித்ததுடன் அநேகம் தர்ம காரியங்களுக்கும் பொருளுதவி செய்தார்.



சென்ற வாரம் சென்னை சர்க்கார் மதுவிலக்கு மந்திரி ஸ்ரீ டேனியல் தாமஸ் காலமானுர். அவரது பிரேதத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது எடுத்த படம். பிரதம மந்திரி ஸ்ரீ ரெட்டியாரும் ஊர்வலத்தோடு சென்ருர்.

புப் பூட்டுகளின்மேல் ஸித்தாஞ்ஜனம் என்னும் களிம்பைத் தடவி மெதுவாக உருவி வந்தால், கிரமமாக கால் முதலிய அவயவங்களுக்கு இயற்கை சக்தி ஏற்பட்டு குழந்தை எழுந்து நடக்க ஆரம்பிக்கும்.

"அமெரிக்கன் ஜர்னல் ஆப் ஜைனகால்ஜி" என்கிற பத்திரிகையில் டாக்டர் ஸி. எப். ப்ளூமன் (Fluhman) என்பவர் கூறுவதிலிருந்து பெண்களுக்கு முதல் ஆர்த்தவம் (மாதவிடாய்) ஏற்படும் வரையில் உட்புற வெளிப்புற அவயவங்களின் வளர்ச்சி (அதிலும் அந்த ஆர்த்தவம் தோன்றுவதற்குமுன் ஒரு வருஷ காலத்தில்) வெகு துரிதமாயேற்பட்டுவரும். முதல் ஆர்த்தவதிற்குப் பிறகும் அவயவங்களின் வளர்ச்சி நடைபெறுமனுலும், முதல் ஆர்த்தவதிற்குமுன் பிறந்ததுபோல் அவ்வளர்ச்சி அவ்வளவு துரிதமாயிருப்பதில்லை. பிறகு மூன்று நான்கு வருஷங்களுக்குள் அவயவங்களின் வளர்ச்சி அநேகமாய் ஒரு நிலைக்கு வந்து நின்றுவிடும். மிக்க இளமை வயதிலேயே பருவம் (ஆர்த்தவம்) அடையும் பெண்கள் உருவத்தில் (வயது வந்த பிறதும்) குள்ளமாய் இருப்பது இயல்பு. பெண்கள் முதற் பருவத்தில் அவரவரது இயற்கை நிலைமைக்கு ஏற்ற அளவு உயர்ந்து, பிறகு உயரத்தின் வளர்ச்சியும் பெரும்பாலும் ஒரு நிலையில் நின்றுவிடுகின்றது. ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் அவர்களுடைய ஏழாவது அல்லது எட்டாவது வயநு வரையில் உடல் வளர்ச்சியில் ஒரே சீராகத்தான் இருப்பார்கள். எட்டாவதிலிருந்து பத்தாவது அல்லது பன்னிரண்டாவது வயது வரையில் இவ்விருபாலருக்கும் அவயவ வளர்ச்சியில் முக்கியமான மாறுபாடுகள் ஏற்படும். பெண்களின் கடிபாகம் என்னும் இடையானது ஆண்களின் இடையைவிட அகன்று விசாலிப்பதும், இடை எலும்புகளின்மேல் மேதஸ் என்கிற கொழுப்பு அதிகமாகச் சேர்ந்து அதைப் பருக்கச் செய்வதும் அப்பருவத்தில்தான். (இவ்வாறு இடை கொழுப்பு முதலியது சேர்ந்து பருமனடைவதாலேயே பெண்கள் குழந்தைகளையும், குடம் முதலியவற்றையும் இடுப்பில் வைத்துத் தாங்கும் இயல்பைப்பெற்றிருக்கிருர்கள்.) ருதுகாலம் ஸாதாரணமாக 28-நாட்களுக்கு ஒரு முறை நிகழ்ந்து வருவது இயல்பென்றுலும், அநேகம் பெண்களுக்கு அப்பருவகாலம் பலவகையில் ஒழுங்கீனமாய்—முன்னதாகவும் பின்னதாகவும்—தோன்றுவதுண்டு. ஆயினும் இக்கால ஒழுங்கீனம் ஆரோக்கிய குறைவைக் குறிப்பதாக முன்னிலும் நம்புவதற்கில்லை. ஆர்த்தவதாதுவென்கிற கருவின் உற்பத்தி, வளர்ச்சி. நெகிழ்ச்சிகளுக்கேற்ப இப்பருவகாலத்தின் நீடிப்பு நிகழ்கிறது. சில ஸ்திரீகள் ஆரோக்கியத்தில் எக்குறைவுமின்றி ஆறு மாதங்களுக்கு ஒரு முறைகூட மாதவிடாயாகலாம். அல்லது கர்பாசயம் போதியளவுவளர்ச்சிபெருமலோ, அல்லது வேறு வகையில் நோய் வாய்ப்பட்டோ இருந்தால், அப்பொழுது ஏற்படுகிற ஆர்த்தவ ரோகங்கள் (மாதவிடாய்க் கோளாறுகள்) எண்ணிக்கையிலும் துன்பமளிப்பதிலும் பல வேருயிருக்குர். ஸ்திரீகளின் அக்கோளாறடைந்த நிலைமைகளைப் பற்றியும், அவற்றிற்கு அவசியமான பரிஹாரங்களைப்பற்றியும் இங்கு விவரிப்பதற்கில்லை.

—

கராச்சி "டெய்லி கெஸட்"டின் நிர்வாக ஆசிரியராக இருந்த ஸ்ரீ எம். எஸ். எம். சர்மாவின் குமாரி சௌ. ராஜமாதங்கிக்கும், மதுரை வக்கீல் ஸ்ரீ ஆர். மஹாலிங்கம் அய்யரின்குமாரன் சி. கல்யாணராமனுக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

கல்யாணபுரம் ஈச்சம்பாடி ஸ்ரீ தி. சத்யநாதன் மருமாள் சௌ. செண்பகலட்சுமிக்கும், திட்டை முடும்பை ஸ்ரீ தேசிகாச்சாரியார் குமாரன் சி. வரதாச்சாரிக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

டிப்பொக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

இந்த முக்கிய அறிவிப்பை நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்!

லக்ஷக்கணக்கானவர்களுக்கு

இது உதவியளிக்கும்.

பிரிய வாசகர்களே! நான் ஒரு நாட்டு வைத்தியனோ அல்லது இங்கிலீஷ் டாக்டரோ அல்ல ஆனால், என் துர் நடத்தைகளின் பலனை அனுபவிக்க நேர்ந்த ஒரு துர்பாக்கியன் நான் கேவலமான எனது கெட்ட செய்கைகளின் பயனாய் பல கஷ்டங்கள் ஏற்பட்டு முடிவில் எனது வலிமை முழுதும் இழக்க நேரிட்டது.

நாளுக்கு நாள் நான் மிகவும் பலவீனமடைந்து வந்தேன். ஹிருதயத் துடிப்பு அதிகரித்து அடிக்கடி கிறுகிறுப்பும் மயக்கமுமாக வந்தது அந்தரங்கமாக ஆயிரக் கணக்கான டாக்டர்களிடம் சிகிச்சை செய்துகொண்டு பார்த்தேன் ஒருவித குணமும் ஏற்படவில்லை இந்த துன்பமயமான வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று நான் நினைக்க ஆரம்பித்தேன்

அதிர்ஷ்டவசமாக வேலை நிமித்தம் நான் பெஷாவர் செல்ல நேர்ந்தது அங்கு ஒரு மஹாத்மாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சோகமே உருவாகத் தோன்றிய என்மேல் அவர் கருணை கொண்டு என்னைப்பற்றி விசாரித்தார் சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்த என் மனம் மஹாத்மாவிடம் உண்மையைச் சொல்லும்படி தூண்டியதால் அவரிடம் மறைக்காமல் என் தேக நிலையின் உண்மையைத் தெரிவித்தேன் மஹாத்மா என்மேல் பச்சாதாபம்கொண்டு உள்ளுக்கு ஒன்றும் வெளியே பூசுவதற்கு ஒன்றுமாக இரு மருந்துகள் தயாரிக்கும் முறையை எனக்குக் கற்பித்தார் அவர் போதனையின்படி அவர் முன்னிலையிலேயே மூலிகைகளை சேகரித்து இந்த இரு மருந்துகளையும் தயாரித்த பிறகு சாப்பிட ஆரம்பித்தேன்.

பிரிய வாசகர்களே! நான் கடவுள் சாட்சியாகக் கூறுகிறேன 7-வது தினமே எனக்கு இளமை திரும்பி விட்டது எனது வலிமையைப் பற்றி நான் இப்பொழுது பெருமை கொள்ளுகிறேன் சில டோஸ்கள் சாப்பிட்டதுமே வியாதி சற்று குறைந்தாலும் மஹாத்மா சொன்னபடி நான் மருந்தை 21 தினங்கள் சாப்பிட்டேன் என்னால் தினம் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது என் கண்கள் பிரகாசம் பெற்றன முகத்திற்கு அலாதி தேஜஸ் ஏற்பட்டது தேகத்தில் புதிய பலமும் தேக திடமும் உண்டாயிற்று ஊருக்குத் திரும்பியதும் இதை நான் அநேகருக்குக் கொடுத்துப் பரீக்ஷித்ததில் வலிமை யின்மையைக் குணமாக்குவதில் இது ஓர் நிகரற்ற டானிக் என்பது ருஜுவாயிற்று

பொது மக்களின் நன்மைக்காக இதை நான் விளம்பரம் செய்கிறேன் தேக திடம் இழந்து ஆயிரக் கணக்கில் செலவழித்தும் குணம் பெறாதவர்கள் இதை உபயோகித்தால் உடனே குணம் பெறுவது திண்ணம். இதன் விலையோ மிகவும் குறைவு அயல் நாடுகளிலிருந்து வரும் ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்ப வேண்டும்.

இளமை யளிக்கும் மாத்திரைகள் 21 தினங்களுக்கு	ரூ.	5-0-0
மேலே பூசுவதற்குத் தைலம்	ரூ.	5-8-0

இதில் ஹானி பயக்கத்தக்க சரக்குகளின் சேர்க்கை கிடையாது கிழவர்கள் யுவர்கள் யாவருக்கும் ஏற்றது சொந்த லாபத்திற்கு விளம்பரம் செய்யவில்லை. மனித சமூகத்தின் நன்மைக்கே விளம்பரம் செய்யப்படுகின்றது. வெளி நாட்டு ஆர்டர்களுடன் முன் பணம் தேவை

குணத்திற்கு உத்தரவாதம் இந்த மருந்தினால் உங்களுக்கு குணமேற்படாவிட்டால் மருந்தின் கிரயத்தை நான் வாபஸ் செய்கிறேன் ஆயிரக் கணக்கான டாக்டர்கள் இதை சிபார்சு செய்திருக்கிறார்கள் எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம்

முக்கிய அறிவிப்பு: நரம்புத் தளர்ச்சி வலிமையின்மை இவைகளால் வருந்துபவர்களுக்கு மட்டும்தான் இம்மருந்து மேக வியாதிகளினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அற்புதமான நிவாரணி. மேலும் இது நல்ல ரத்த விருத்தியளிக்கிறது

ஆங்கிலத்தில் எழுதவும்: **THE MANAGER.**

Dar-Ul-Shafa - Golian (Regd)

Batala, East Punjab.

மானேஜர்: தார்-உல்-ஷபா கோலியான் (ரிஜிஸ்டர்டு)

பட்டாலா, கிழக்கு பஞ்சாப்.

மதராஸ் பெங்களூர் ஸ்டாகிஸ்டுகள்:—(1) மெஸர்ஸ் ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ம ராஜா ரோட், பெங்களூர் ஸிடி. (2) மெஸர்ஸ் ஆல்பட் & கோ., 182, மவுண்ட்ரோட், மதராஸ். (3) மெஸர்ஸ் வாஸன் டிரக் ஸ்டோர்ஸ், ஹைகோர்ட்டுக்கு எதிரில் மதராஸ். (4) மெஸர்ஸ் மில்டன் & மில்லர், 157, பிராட்வே, மதராஸ்.



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தேவை

கீழ்க்குறிப்பிட்ட இடங்களுக்கும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கும் எமது தினசரி, வாரப்பதிப்புகளை பட்டுவாடா செய்யவும் விற்பனை செய்யவும் ஊக்கமுள்ள ஏஜண்டுகள்தேவை. விண்ணப்பதார் உள்ளூர் வாசியாக இருக்கவேண்டும். விவரங்களுக்கு எழுதவும்:

1. கள்ளிக்கோட்டை:-
2. பொன்னேரி:-

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன் 'விக்டரி ஹவுஸ்,'
மவுண்ட்ரோட், சென்னை

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம்	,,	ரூ. 2.
மூன்றாம் பாகம்	,,	ரூ. 2.

தபால் செலவு அணா 10.

முன்பணம் அனுப்பவேண்டும்.

V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

தசை வலிகளுக்கு

உலகப் புகழ்பெற்ற
ஜாம்பெக் நிவாரணமளிக்கும்



ஜாம்-பெக் மிருதுவாக தேய்த்தால் சீக்கிர நிவாரணமேற்படும். இவ்வற்புத மூலிகை மெழுகிலுள்ள மருந்து எண்ணெய்கள் சருமத்தினுள் புகுந்து களைப்புற்ற தசைகளுக்கும் கீல் பிடிப்புகளுக்கும் சமனமூட்டி குணமளிக்கும் பிராணிகள் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும்
கிருமிநாச மருந்து

சரும நோய்கள், காயங்கள் பூச்சிகடிகள். புண்ணுசி வலிக்கும் கால்கள், தசை வலி, தேகக் குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

ஏஜண்டுகள் மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும நரம்புகளையும பலப்படுத்தும். திடசாலியாயும யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம் இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சகதி உள்ளது. இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸூத்ரம். ஸ்ரீதன்வந்தரீ யந்திரம, இவைகளை மந்திர பூர்வமாய் ஸதாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைகோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனும்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாபபூர், மதராஸ்

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை

போன் நெ. 3432.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும்
சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

உங்கள் எதிர்காலம்



பணமிலேமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடுமபம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிகக ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் :	லக்ஷிமி & கோ.,
வால்டேர், ஆர். எஸ்.	2/135, பிராட்வே. மதராஸ்.

சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை



ராம்ராஜ்யா ஹால்

N.R. ராமசந்திர செட்டி & கோ., கடைவீதி... சேலம்

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள்
காலணுவுக்கு இரண்டு.

சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

இவ்வுலகவாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். மெஸ்மெரிஸம், ஹிப்னுடிஸம், மானிட வசியம் முதலிய சாஸ்திரங்களின் இரகசியத்தை அனுபவ சாத்தியமாக விளக்கிக்கூறும் அருமையான இரகசிய நூல். இந்நூலைப்படித்த பின் இதன் அருமையை நீங்கள் நன்குணர்வீர்கள். கண் கவரும் வனப்பு வாய்ந்த சிறந்த நூல். இதன் முன் பதிப்புக்களில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் செலவாயிருப்பதே இதன் மேன்மையைக் குறிக்கும். இன்றே உங்கள் பிரதிக்கெழுதுங்கள்.

விலை ரூ. 4—8—0

தபால் செலவு அணு 10.

எஸ். ஜே. புக் டெப்போ
30, சாந்தோம் : சென்னை 4.

கொழும்பில் கெய்ஸர் வீதி, 166
K. மதார் சாஹிப் இடமும் கிடைக்கும்.

அவளுக்கு

வியாதிக்குப் பிறகு

அவனுக்கு

பலங்குன்றிய சமயத்தில்

அவர்களுக்கு

வளரும் போது

விடோபெரின்

ஒரு

I·T·L

விடோபெரின் சிறந்த புஷ்டியளிக்கும் டானிக். அதில் ஏ, டி, விடமின் சத்தும், ஆரோக்கியமளிக்கும் உலோகப் பொருள் சத்தும் உள்ளன. மதுரமான சுவை யுள்ளது.

விற்பனை ஏஜெண்டுகள் :

தயாரிப்பு. பெஸ்ட் & கம்பெனி, லிமிடெட்.

BVK·12 TM.

தயாரிப்பவர்கள் :—மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட்., மல்லேச்வரம், பெங்களூர்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஒளஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. ப. பார்சலில் தேவையுள்ளோர் தபால சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.



A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷி மைக்ருஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர் பாக்கு, பால்கோவா, பிஸ்கட், கேக், உப்பிட்டு சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும், பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல்தரமான ஜவ்வரிசி ஈரோடு, சேலம் மஞ்சள் ரகங்கள், நெ. 1. மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும், பீடிக்கும் வேண்டிய உயர்தரமான புகையிலை ரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடைபோடக்கூடிய பைபீல்ட் வேயின் மெஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

ஜவ்வரிசி தயாரிக்கும் முறை அடங்கிய புத்தகம் வேண்டுவோர் ரூ. 1. அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கும் சாம்பிளுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமணியம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ், அண்டு மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள் ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House. Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No 2514.

தரகரை நம்பினல் . . .

நீங்கள் மோசம் அடைவீர்கள்

வைரம் வாங்குவதில் மிதமிஞ்சி ஜாக்கிரதை யுள்ளவர் வியாபாரியின் நாணயத்தை நம்பாமல் மூன்ரும் மனிதரை நம்பினல் ஏமாற்றமடைவர்.

தரகர் தன்னுடைய நலனுக்கே பாடுபடுவார். சுய நலனுக்காக தனக்கு சகாவான வியாபாரியிடமே விகிதம் நிர்ணயித்துக்கொள்வார்.

அதிகமான வருப்படி கிடைக்கும் இடத்திற்கே அவர் வியாபாரத்துக்கு சிபார்சு செய்வார். அதனல் உங்களுக்கு சிறந்த ரகம் கிடைக்காது. உங்கள் நலன் பாதிக்கப்படும்.

★ புகழ் பெற்ற வியாபாரிகளிடம் நேருக்கு நேர் வியாபாரம் செய்வதே உங்களுக்கு நலனைத் தரும்.

ஸுராஜ்மல்ஸ்

50 வருஷப் புகழ்பெற்ற வைர வியாபாரிகள்.

313, நேதாஜி ரோட், : : சென்னை.